Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 01 (12.03.2005) சனிக்கிழமை இதழ்:163







# குடும்பஸ்தரை மோதியது ராணுவ ட்ரக்; சாவகச்சேரியில் மக்கள் ஆர்ப்பாட்டம்!



## படையினரின் தாக்குதலில் பலர் காயம்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் நேற்று இராணுவ வாகனம் மோதி பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்த சம்பவத்தை அடுத்து - ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் படையினர் மற்றும் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கியதுடன் இரண்டு இராணுவ காவலரண்களையும் தீயிட்டு எரித்தனர்.

இதையடுத்து படையினரும் பொலிஸாரும் தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தி ஆவேசம் கொண்ட மக்களை அடக்கமுற்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## விடுதலைப் புலிகளின் போக்குகளை புரிந்துகொள்ள முடியவில்லையாம்!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தம் ஏற்பட்ட பின்னரும் கூட விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்புவார்களென தான் நினைக்கவில்லையென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

விடுதலைப்புலிகளின் எண்ணப்போக்குகளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னரும் கூட அவர்கள் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் வருவார்களென நான் நினைக்கவில்லை.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களுக்கான நிவாரண உதவிப் பொருட்களை வழங்குவதற்கு அரசாங்கத்தை அனுமதித்தமை மற்றும் அரசுடன் இணைந்து செயற்படுகின்றமையை இட்டு நான் விடுதலைப் புலிகளைப் பாராட்டுகின்றேன்.

நிவாரண விநியோகம் தொடர்பாக அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் மிகச் சிறந்த முறையில் இணைந்து செயற்படுகின்றனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிமக்களுக்கான நிவாரண உதவிப் பணிகளுக்காக தொன் கணக்கில் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளோம்.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் 2000 மெற்றிக் தொன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவு வேளை வீட்டுக்குள் புகுந்த சிப்பாய் மீது நடவடிக்கை எடுக்குமாறு துன்னாலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

(பருத்தித்துறை)

துன்னாலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நள்ளிரவு நேரம் அத்துமீறி வீட்டுக்குள் புகுந்ததால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் இராணுவத்திற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தி இராணுவக் காவலரணைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

நேற்றுமுன்தினம் இரவு 12.30 மணியளவில் துன்னாலை தெற்கு – கலிகைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவமுகாமிலிருந்து, 200 மீற்றர் தொலைவிலுள்ள வீடொன்றில் வசிப்பவர்கள் படம் பார்த்துவிட்டு வீடுதிரும்பிய வேளை, வீட்டு வளவின் வேலிக்குள் இராணுவச் சிப்பாய் ஒருவர் மறைந்திருந்தார். கிணற்று வாளி வாங்க வந்ததாக இந்தச் சிப்பாய் கேட்டதை அடுத்து வீட்டுக்காரரும் வாளி எடுக்கச் சென்றபோது, குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் அவ்விடத்திலிருந்து ஓட்டம் பிடித்தார்.

இதையடுத்து வீட்டுக்காரர் அயலவர்களுடன் சேர்ந்து துரத்திச் சென்ற போது, சிப்பாய் இராணுவ முகாமிற்குள் நுழைந்து விட்டார்.

அப்போது பொதுமக்கள் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் சென்று முறையிட்டபோது அவர் தனக் குத் தெரியாமல் யாரும் வெளியே போகவில்லை எனவும், வீட்டுக்குள் வந்தது பொதுமகனாக இருக்கலாம் எனவும் தெரிவித்தார். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் இரவு 12.30 மணியளவிலே நெல்லியடி பொலிஸாரிடம் முறையிட்டதாகவும் அவர்கள் உடனே எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லையென அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதன் பின்னர் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் நேற்றுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் அலுவலகத்தின் மீது மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு!

### நான்கு பேர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புளொட் அலுவலகம் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள புளொட் அமைப்பின் மாவட்ட அலுவலகம் மீது நேற்று பிற்பகல் 2 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மாவட்ட அமைப்பாளர் ரதன் எனப்படும் சுப்ரமணியம் பகீரதன் (வயது 45), கந்தன் எனப்படும் தம்பிராசா பாலசுந்தரம் (வயது 32), வெள்ளை எனப் படும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உயர்மட்டக் குழு ஒஸ்லோ சென்றடைந்தது!

(ஒஸ்லோ)

உலகநாடுகளின் ஆதரவையும், உதவிகளையும் பெற்று சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி துரிதகதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாக –

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் ஒஸ்லோவை சென்றடைந்த பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய நிலைமைகள் குறித்தும் – தென்பகுதியில் எழுந்திருக்கும் புதிய அரசியல் சூழல் குறித்தும் தாம் கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு ஒஸ்லோவை வந்தடைந்த புலிகளின் உயர்மட்டக் குழுவினரை தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஒஸ்லோ மாநகரசபை உறுப்பினர் பாஸ்கரன் ஆகியோர் வரவேற்றனர்.

## விண்ணாணம் விநாசியர்



அம்மான்ர போக்கத்தான் பாருங்கோ ஒருத்தராலையும் புரிஞ்சுகொள்ள முடியேல்ல...!

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR Your friend in the skies...

# ஜெயந்தி விழா

பகவான் ஸ்ரீ ராம கிருஸ்ணரின் 170ஆவது ஜெயந்தி விழா இன்று அதிகாலை 5 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் நடைபெற வுள்ளன.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியும் வித்தியாலய முதல் அதிபர் அமரர் க.முருகேசு ஞாப கார்த்த சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 1 மணிக்கு அதிபர் நா.சிவஞானம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# பொதுக்கூட்டம்

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய, பாடசாலை அபிவி ருத்திச் சங்கத்தின் பொதுக்கூட் டம் இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மண்டபத்தில் நடை பெறும் இப்பொதுக்கூட்டத்தில் இவ்வருட உத்தியோகத்களுக்கான தெரிவும் இடம்பெறவுள்ளதாக அதி பர் தெரிவித்துள்ளார். (48)


**நாகம்ஸ்** சுன்னாகம்

சரத்குமார், நமீதா, வடிவேலு, கபாலி நடித்த

**ஏய்**



11.00, 3.00, 7.00, 10.00

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது

11.3.2005 முதல் லியோலாட் - டிக் அப்பினோ - கேள் நடித்த **டைட்டானிக்** கா.நே(பு.நே) 10.30 2.30

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க திரையிடப்படுகின்றது.

றஜினி - அம்பிகா நடித்த **நான் சிவப்பு மனிதன்** கா.நே(பு.நே) 6.30 9.30

(சி-3857)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜய், திரிசா நடித்த

**திருப்பாச்சி**

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-3856)

**மனோகரா** திரையரங்கு

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக

மாறுபட்ட வேடங்களில் சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த **மாயாவி**

கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

பிரசாந், வடிவேல், மும்தாஜ்

**லண்டன்**

இயக்கம்: சுந்தர்.C

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

(சி-3859)



# ENGLISH CAMP 2005

## J/ VEMBADI GIRLS' HIGH SCHOOL

The Inauguration Ceremony
On 11th March 2005 at 4.00 p.m
&
The Closing Session
On 12th March 2005 at 3.00 p.m

Venue: School Main Hall.

Chief Guest: Mr.P.Vigneswaran
The Zonal Director of Education
Valikamam.

Media Sponsored by: ஈழநாடு

English Union
J/ V.G.H.S


# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 - 07 - 1933

மறைவு 10 - 02 - 2005



அன்புடையீர்!

கடந்த 10.02.2005 வியாழக்கிழமை சிவபதமடைந்த

அமரர் திருமதி **பரமசாமி அழகம்மா** அவர்களின்

அந்தியேட்டி 12.03.2005 சனிக்கிழமை 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அவரின் மறைவு செய்தி கேட்டு உடன்வந்து உதவியவர் களுக்கும், அவர் சுகயீனமுற்றிருந்தவேளை உதவிய யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் தாதிமார் அனைவருக்கும், அத்துடன் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
077 3126979

இங்ஙனம்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

## ஆரம்பம்: 21.03.2005

I. A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING — DURATION 1 YEAR
B. DIPLOMA IN MICRO SOFT OFFICE — DURATION 6 MONTHS
C. DIPLOMA IN TYPE SETTING — DURATION 3 MONTHS
D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING — DURATION 4 MONTHS
E. DIPLOMA IN DESK TOP PUBLISHING — DURATION 6 MONTHS
F. DIPLOMA IN ACCESS INCLUDING S. Q. L — DURATION 3 MONTHS
G. INTERNET & E - MAIL — DURATION 1 MONTH
H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY — DURATION 5 MONTHS

II. CERTIFICATE COURSES:

1. M.S. WORD - 2000
2. M.S. EXCEL - 2000
3. M.S ACCESS - 2000
4. M.S. POWERPOINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d BASE 111+
8. PAGE MAKER
9. WINDOWS-95
10. COREL DRAW
11. d BASE FOR WINDOWS
12. PRINT SHOP DELUXE
13. ADOBE PHOTO SHOP
14. QUICK BOOK

**EACH 3 MONTHS**

III. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — காலம் 6 மாதங்கள்
(PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) — காலம் 6 மாதங்கள்
IV. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) — காலம் 6 மாதங்கள்
V. மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & Diesel வாகனங்கள்) — காலம் 6 மாதங்கள்
VI. ஜெனரல் எலக்ரிஸன்
(மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) — காலம் 6 மாதங்கள்
VII. வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் — காலம் 8 மாதங்கள்
VIII. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி — காலம் 3 மாதங்கள்
(ON THE JOB TRAINING வழங்கப்படும்)
IX. மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING) — காலம் 6 மாதங்கள்
(ON THE JOB TRAINING வழங்கப்படும்)
X. மரவேலை (With Use of Machinery) — காலம் 6 மாதங்கள்
XI. குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் — காலம் 6 மாதங்கள்

**எமது நறுவனத்தில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்ப டும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். அத் துடன் சகலவிதமான இரும்பு சார் உற்பத்திப்பொருட்களும், ஒட்டு வேலை களும, மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.**

**NOTE**

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரங்காட்டி, பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3 பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2005

2005ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தில் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன என்பதைச் சகல வாகன உரிமையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

சனி, ஞாயிறு வகுப்புகளும் இடம்பெறும்

## VACANCY

Tamil Short hand & Typing Instructor. தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் போதனா சிரியர் மேற்படி பதவிக்குச் சிறந்த தகைமை உள்ளவர்கள் உடன் **15.03.2005** ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ விண்ணப்பிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு:

**REGISTRAR,
PATRICIAN INSTITUTES
59,St.Patrick's Road,
Jaffna.**

(3891) T.P.: 222 6148

# முஸ்லிம் பிரதிநிதிகள் புலித்தேவனை சந்திப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளருக்கும் முஸ்லிம் சமாதான செயலக முக்கியஸ்தர்களுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பம்பலப்பிட்டியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் பேசும் மக்களிடையேயான நல்லுறவு குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும், நிலவுகின்ற முரண்பாடுகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பது குறித்துப் பேசப்பட்ட தாகவும் தெரியவருகிறது.

ஐரோப்பிய பயணத்தை மேற்கொள்ள கொழும்பு வந்த புலித்தேவனுடன் முஸ்லிம் சமாதான செயலகத்தின் முக்கியஸ்தர்களான, சட்டத்தரணிகளான அபூல்கலாம் மற்றும் சல்மான் உள்ளிட்டோர் சந்தித்து உரையாடியதாகத் தெரியவருகிறது. (01)

# உதவிகளை பகிரங்கப்படுத்த நீதிமன்றில் மனுத் தாக்கல்!

(கொழும்பு)

சுனாமி தொடர்பான சகல நிதியுதவிகளையும் பட்டியலிட்டு பகிரங்கப்படுத்த உத்தரவு இடுமாறு கோரும் மனுவொன்று, மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளைச் சேர்த்த நிறுவனங்களும், பல்வேறு அமைப்புகளும் செய்த உதவிகளைப் பகிரங்கப்படுத்துமாறு கோரி தேசமானிய லலித் கொத்தலாவ தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்வதற்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் - பிரதிவாதிகளாகத் தேசிய நடவடிக்கை தலைமையக அதிகாரிகளும், கணக்காய்வாளர் நாயகமும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களை விசாரணை செய்வதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியதுடன், தேசிய நடவடிக்கை தலைமையக அதிகாரி களையும், கணக்காய்வாளர் நாய கத்தையும் எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகும்படி அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

# விமானங்கள் மற்றும் ஓடுபாதைகளை புலிகள் தமக்கு மறைத்துள்ளனராம்!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஒரு விமான ஓடுபாதையையும், ஓரிரண்டு விமானங்களையும் பெற்றிருப்பதாக எமக்குத் தெரியவந்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளைப் பயன்படுத்திக்கொண்டு, அதை எம்மிடம் மறைத்துள்ளார்கள் என விடுதலைப் புலிகளின் விமானங்கள் மற்றும் விமான ஓடுபாதை தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்கா பி.பி.ஸிக்கு நேற்று முன்தினம் இரவு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அந்தச் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்த ஒப்பந்தம் நூறு சதவீதம் கடைப்பிடிக்கப்படுகிறது என, இராணுவத்தினர் எதிர்பார்ப்பது என்பதை விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, விமானப்படை என்னும் ரீதியில் தமது திறமையையும், ஆற்றலையும் மேம்படுத்திக்கொள்ள அவர்கள் முயன்று வந்துள்ளனர்.

இதுதான் விடுதலைப் புலிகள்.

போர்நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்னர், புலிகளின் விமான ஓடு பாதை இருந்திருந்தால் அதை நாம் அப்போதே அழித்திருப்போம். அவர்கள் ஒவ்வொரு சமயத்திலும், ஒவ்வொரு விதமாகப் பேசுகின்றனர்.

போர்நிறுத்தத்துக்கு முன்னரும்கூடப் பல விடயங்களை அவர்கள் திருத்திக் கூறியுள்ளனர். இந்தத் திறனையும், ஆற்றலையும் போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபின்னர்தான் அவர்கள் அடைந்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர், புலிகள் விமானங்களைப் பெற்றதில் நாம் கவனக்குறைவாக இருந்து விட்டோம் என்று கூறுவதில் ஒன்றுமேயில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தமொன்று கையெழுத்தாகி உள்ளபோது, அவர்கள் அதை மதிக்கவேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தத்தில் நாம் இணங்கியிருந்த நிபந்தனைகள் எல்லாவற்றையும் நாம் நூறு சதவீதம் கடைப்பிடித்து வந்துள்ளோம்.

ஆனால், விடுதலைப் புலிகள் இவ்வாறு நடந்துகொண்டுள்ளனர்.

எனவே சர்வதேச சமூகமும், மற்றையவர்களும் விடுதலைப் புலிகள் மீது அழுத்தம் கொடுத்து, இவ்வாறு அவர்கள் செயற்படுவதை நிறுத்த வேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கும், விடுதலைப் புலிகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென வலியுறுத்த வேண்டும்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு உள்ளது. அவர்கள் தான் அதைச் செய்யவேண்டும்.

இராணுவ மட்டத்தில் எதைச் செய்யவேண்டுமோ, அதை நாம் ஏற்கனவே செய்து விட்டோம். இது குறித்து ஏற்கனவே நாம் உயரதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டோம்.

இராணுவ மட்டத்துக்கு அப்பாற்பட்டு, அரசியல் மட்டத்திலும் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவே நாம் அறிகிறோம் எனத் தெரிவித்தார்.

# மாகாணமட்ட மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் மூலம் மூன்று மொழிகளிலும் வழக்குகளை விசாரிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும்

## அமைச்சர் பெர்ணான்டோ புள்ளே

(கொழும்பு)

பதினெட்டாவது அரசியல் சாசனத்துக்கு அமைய மாகாண மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை நிறுவுவதன் மூலம் மூன்று மொழிகளிலும் வழக்குகளை விசாரிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுமென அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே தெரிவித்தார்.

பதினெட்டாவது அரசியல்சாசன திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் பெரும்பாலும், ஆங்கில மொழிகளிலேயே நடைபெறுகிறது. எவ்வாறாயினும் பிரதேச மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிறுவும்போது, இளம் சட்டத்தரணிகளுக்குத் தமது திறமையை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இதற்கு எதிர்கட்சிகள் பூரண ஆதரவு வழங்குவதுடன், நீதிமன்றங்களில் குவிந்துள்ள வழக்குகள் இலகுவில் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பதினெட்டாவது அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பான விவாதத்தை - ஒத்திவைப்பது தொடர்பான அரசாங்க பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டன. (தே)

# கிழக்கின் கொலைகள் தொடர்பாக விவாதம் தேவை; ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்குப் பிராந்தியத்தில் நிகழும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஒருநாள் விவாதம் தேவை என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி கூடிய நாடாளுமன்றக் கூட்டத்தில் சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்சவால், கிழக்குப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற கொலைகள் பற்றி விசேட அறிக்கையொன்றை விடுத்து, உரையாற்றியபோதே ரவூப் ஹக்கீம் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெறும் கொலைகள் பற்றி ஜே.வி.பியினர் அறிக்கை விடுவதால் மட்டும் பயனில்லை. அவர்கள் அரச தரப்பினர். ஆகையால் இது பற்றிய பொறுப்பு அவர்களுக்கும் உண்டு.

இந்த விவாதம் பற்றி சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டார -

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கப்படும் என சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார். (தே)

## தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டோருக்கு நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவாக ரூபா 5 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை - வீட்டு பாவனைப் பொருட் கொள்வனவுக்கென ரூபா 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கென 29 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு, 32 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 100 மீற்றர் தடை வலயத்தால் ஜனாதிபதி மாளிகை அகற்றப்படுமா?

## கடற்தொழில் அமைப்பு கேள்வி

(கொழும்பு)

கடலில் இருந்து 100 மீற்றருக்கு அப்பாலேயே கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தைக் கடுமையாக அமுல் படுத்தினால், ஜனாதிபதி மாளிகையை அதன் அமைவிடத்தில் இருந்து அகற்றவேண்டிய நிலை தோன்றும் என, கடற்தொழில் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்காததால், இந்த விடயம் அரசியலாக மாறும். 100 மீற்றர், 200 மீற்றர் தீர்மானம் என்பது ஒருதலைப்பட்சமான தீர்மானம் என்பதையே நாம் காண்கிறோம்.

குறைந்தபட்சம் கரையோரப் பகுதிகளிலுள்ள சமூக சேவையாளர்களுடனாவது கலந்துரையாடி இருக்கலாம் என அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கிறது.

## குற்றச்செயலில் ஈடுபடுவோர் தொகை அதிகரிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் தொகை 38692 ஆக உயர்ந்துள்ளதாகப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றவாளிகளின் பட்டியல்களில் - பெண்கள் 482 பேர் அடங்கியுள்ளதாகப் பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவின் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கிங்ஸ்லி பெரேரா தெரிவித்துள்ளார்.

குற்றங்களைத்தடுக்கும்ஆணைக்கமைய இந்தக் குற்றவாளிகளில் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள், கொலைச் சம்பவங்கள், கொள்ளை போன்றவற்றில் தொடர்புடையவற்றால் பலமுறை சிறைத்தண்டனை அனுபவித்தவர்களாவர். (தே)

# கிழக்குப் படுகொலைகளை படையினர் தடுக்கவேண்டுமாம்!

## விமல் வீரவன்ச கோரிக்கை



(கொழும்பு)

கிழக்கில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் கொலைகளை உடன் தடுத்த நிறுத்துவதற்குப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கூட்டத்தில் விசேட அறிக்கையை வாசித்தபோதே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்த அவர் -

போர்நிறுத்த உடன்படிக்கை காரணமாக மோசமான செயல்கள் சிலவற்றை உடன்நிறுத்த முடியாதுள்ளது. இதைவிட போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மௌனம் காப்பதால், படையினர் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விமர்சிப்பதை விட்டு ஜே.வி.பி செயலில் இறங்க வேண்டும்!

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)



அரசாங்கத்திலிருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது போன்று மக்களை ஏமாற்றாமல், உரியவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முனையவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஜே.வி.பியினரைக் கோரியுள்ளார்.

அரசசார்பற்ற நிறுவனங்களைப் பொறுப்பில்லாமல் ஜே.வி.பி விமர்சிக்கிறது. ஆனாலும், அரசாங்கத்தில் இருப்பதனால் தவறு இருந்தால் தவறு செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறு செய்யாமல் வெறுமனே கத்துவதில் பிரயோசனம் இல்லை. சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தவறு செய்வதை வைத்து அனைத்து நிறுவனங்கள் மீதும் குற்றம் சுமத்துவது ஆரோக்கியமற்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும்!



(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பொதுக் கட்டமைப் பொன்றை உருவாக்கும் திட்டத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பதாக அறிவித்துள்ளது. கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூர் ஹக்கீம் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசும்போது -

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப் பொன்றை உருவாக்குவதன் மூலம் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைத்துவிடாது. இந்தப் பொதுக்கட் டமைப்பில் முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டால் மட்டுமே அது முழுமை பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# பாகிஸ்தானுடனான டெஸ்டில் இந்தியாவுக்கு வெற்றிவாய்ப்பு!



பாகிஸ்தான் அணிக்கு எதிராக மொஹாலியில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான இன்று இந்திய அணி வெற்றிபெறுவதற்கான பிரகாசமான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்திய அணி 3ஆவது நாள் ஆட்ட நேரமுடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 447 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

லக்ஸ்மன் 21 ஓட்டங்களுடனும், பதான் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று 4ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.

பாகிஸ்தானின் பந்துவீச்சை இருவரும் அடித்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஸ்கோர் 465ஆக இருந்தபோது பதான், கனேரியா வீசிய பந்தைத் தூக்கி அடிக்க முயற்சிசெய்தார். ஆனால் துரதிஷ்டவசமாக பந்து விக்கெட் காப்பாளரிடம் சென்றதால் ஸ்டம்பிங் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அவர் 13 ஓட்டங்களை எடுத்தார்.

இதையடுத்து 8ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக பாலாஜி, லக்ஸ்மனுடன் இணைந்தார். இருவரும் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் இந்திய அணி 144 ஆவது ஓவரில் 500 ஓட்டங்களைக் கடந்தது. ஸ்கோர் 503ஆக இருந்த



போது லக்ஸ்மன் அரைச்சதமடித்தார். இது அவரது 21ஆவது அரைச் சதமாகும்.

அதிரடியாக ஆடிய பாலாஜி 31 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஆட்டமிழந்தார். அவர் 36 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

லக்ஸ்மன் - பாலாஜி ஜோடி 8ஆவது விக்கெட்டுக்கு அதிரடியாக 42 ஓட்டங்களைச் சேர்த்தது. இதற்கு முன்பு மொஹாலி மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகள் ஜோடியான ஜிம்மி அடம்ஸ் - வோல்ஸ் ஜோடி 38 ஓட்டங்களை எடுத்திருந்ததே அதிக பட்ச ஸ்கோர். இதனை லக்ஸ்மன் - பாலாஜி ஜோடி முறியடித்தது.

சிறிது நேரத்தில் லக்ஸ்மனும் ஆட்டமிழந்தார். அவர் 125 பந்துகளில் 58 ஓட்டங்களை எடுத்தார். அடுத்துவந்த சகீர்கான் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். முடிவில் இந்திய அணி 516 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தது.

204 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான் இரண்டாவது இனிங்ஸை ஆடியது. அந்த அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. ஆட்டத்தின் 2ஆவது ஓவரிலேயே பாலாஜி வீசியபந்தில் அவரிடமே பிடிகொடுத்து தௌபிக் உமர் ஆட்ட



மிழந்தார். அவர் 4 ஓட்டங்களை எடுத்தார்.

நேற்று பாலாஜியின் பந்துவீச்சில் அனல் பறந்தது. அவர் அடுத்த ஓவரில் மேலும் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். யுனுஸ்கானை அவர் ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் கிளீன் போல்ட் ஆக்கினார்.

அதற்கு அடுத்த ஓவரில் சல்மான் பட், பதானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதனால் பாகிஸ்தான் 10 ஓட்டங்களை எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து தவித்தது.

அடுத்து களமிறங்கிய யுகானாவும், இன்சமாமும் சற்று நிலைத்து நின்று ஆடினர். அந்த அணி உணவு இடைவேளைவரை 3 விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களை எடுத்திருந்தது.

உணவு இடைவேளைக்குப் பின்பு அந்த அணி தொடர்ந்து ஆடியது. ஸ்கோர் 80ஆக இருந்தபோது இன்சமாம் அரைச்சதமடித்தார். அவர் 53 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைக் கடந்தார்.

இருவரும் அடித்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். பாகிஸ்தான் 149 ஓட்டங்களை எடுத்திருக்கும்போது இன்சமாம் 86 ஓட்டங்களில் கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து அசீம் கமல் களமிறங்கினார். இவர் ஓட்டம் எதுவும் எடுக்காதநிலையில், கும்ளேயின் பந்துவீச்சில் ராவிட்டிடம் பிடிகொடுத்தார். ஆனால் இருமுறை ராவிட் பிடியெடுக்கத் தவறிவிட்டார்.



பின்னர் யுகானாவும் அரைச் சதத்தைக் கடந்தார். ஸ்கோர் 193ஆக இருக்கும்போது 68 ஓட்டங்களைப் பெற்ற அவர், கும்ளேயின் பந்து வீச்சில் போல்டானார்.

அதனைத் தொடர்ந்து அப்துல் ரசாக் களமிறங்கினார். அசீம் கமல் 48 ஓட்டங்களைப்பெற்றிருக்கும் போது, பாலாஜியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது பாகிஸ்தான் அணி 243 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அடுத்து கம்ரன் அக்மல் களமிறங்கினார். இருவரும் 4ஆவது நாள் ஆட்டம் முடியும்வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அப்துல் ரசாக் 22 ஓட்டங்களுடனும், கம்ரன் அக்மல் 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்திய வீரர்கள் பாலாஜி 3, கும்ளே 2, பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் 2ஆவது இனிங்ஸில்



74 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 257 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இந்தியாவைவிட 2ஆவது இனிங்ஸில் 53 ஓட்டங்கள் அதிகம் உள்ளது. கைவசம் 4 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்று காலை இந்திய அணி பாகிஸ்தான் விக்கெட்டுக்களை வேகமாகக் கைப்பற்றினால் இந்தியா எளிதில் வெற்றி பெறும்.

## விளையாட்டு


### மகாஜனக் கல்லூரி பழையமாணவர் சங்கம் - கொழும்பு

### கூறுவிலை கோரல்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பிரதான மண்டபத்தின் கீழ்மாடியில் அமைந்துள்ள நூல்நிலைய திருத்தவேலைகளுக்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன (இக்ராட் பதிவு தேவையில்லை).

கூறுவிலைப் படிவங்களை கல்லூரி அதிபர் அலுவலகத்தில் 18-03-2005 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 1.30 வரை மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 2000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 24-03-2005 அன்று பி.ப.2.00 மணிக்கு முன்னர் கல்லூரி அதிபரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப் படவேண்டும்.

யூரோவில் இன்வெஸ்ட்மென்ட்
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (1083)

எந்திரி மா. இராமதாசன்
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்
சங்கம் - கொழும்பு சார்பாக


## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு தான் முதலாவதாக நகர்த்தலை ஆரம்பித்து இரு நகர்த்தல்களுக்குள் வெள்ளையினை Check mate ஆக்குவதற்கு யாது செய்தல் வேண்டும்? *(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... $Nd_3$ + 2.. $Kd_1$ $Bb_3$ Check mate

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

# பொன் அணிகளின் போர் பற்றிக்ஸ் 267 ஓட்டங்கள்!



பொன் அணிகளின் போரென வர்ணிக்கப்படும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 88ஆவது வருட கிரிக்கெட் போட்டி நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்த அணி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் அவ்வணி 56 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த அணி சார்பாக விதுபாலா 49, அருண் 42, சுரேன் 41 ஓட்டங்களையும், வின்சன் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிவப்பிரகாசம் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன்பின் யாழ்ப்பாணக் கல்லூரி தனது ஆட்டத்தைத் தொடங்கினாலு அவ்வணி 34 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் வின்சன் 3, லூட்சன் 4, முரளிதரன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பலோ ஒன் நிலையிலிருந்த யாழ்ப்பாணக் கல்லூரி அதனைத் தவிர்க்கும் வகையில் தனது இரண்டாவது இனிங்ஸை விளையாடியது. நேற்றைய ஆட்டநேரமுடிவில் அவ்வணி 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.



# அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக நியூஸிலாந்து 433 ஓட்டங்கள்!



(கிறிஸ்ட்சேர்ச்)

அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் - நியூஸிலாந்து அணி 433 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததையடுத்து அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடி - 3 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை முதல் நாள் ஆட்டநேரமுடிவில் - 3 விக்கெட் இழப்புக்கு 265 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த நியூஸிலாந்து அணி நேற்று தொடர்ந்து ஆடியது.

அணியின் ஸ்கோர், 330ஆக இருந்தபோது, நான்காவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. மார்ஷல் 256 பந்துகளில் 23பவுண்டரிகள், 1சிக்ஸருடன் 146 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்ததையடுத்து, அஸ்ரிலுடன் மக்மிலன் ஜோடி சேர்ந்தார்.

எனினும் மக்மிலன் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து - மக்கலம் களமிறங்கியபோதும், அவரும் நிலைத்துநின்று ஆடவில்லை. 35 பந்துகளில் 29 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்துசெல்ல, விற்றோரி மைதானத்துக்குள் நுழைந்தார்.

இவர் நிலைத்துநின்றபோதும்- அஸ்ரில் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துவிட்டதால், எதிர்முனையில் எவரும் நிலைத்துநின்று ஆடாமல் சென்றுகொண்டிருந்தனர். பிறாங்னின் -0, ஓபிறெயின் -5, மார்ட்டின் -1 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் நியூஸிலாந்து அணி, 433 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

விற்றோரி ஆட்டமிழக்காமல் 24



ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் மக்ரா -6, வோன் -2, கஸ்பரோவிச் -1, கிளார்க் -1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடியது. எனினும் ஸ்கோர் 48ஆக இருந்தபோது - முதல் விக்



கெட்டாக லாங்கரையும், ஸ்கோர் 74ஆக இருந்தபோது ஹைடனும், 140ஆக இருந்தபோது மார்ட்டினும் ஆட்டமிழந்தனர்.

லாங்கர் 28 பந்துகளில் 23 ஓட்டங்களையும், ஹைடன் 74 பந்துகளில் 35 ஓட்டங்களையும், மார்ட்டின் 62 பந்துகளில் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இரண்டாம்நாள் ஆட்டநேரமுடிவில் - அவுஸ்ரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பொண்டிங் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்றநிலையில் இருந்தார்.

பந்துவீச்சில் பிராங்னின், ஓபிறெய்ன், விற்றோரி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# பாலு கரடியும் சிம்பு முயலும்






# தாரகை

**சிந்தனைக்கு**

உங்களை யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள். பொய்யாக இருந்தால் சிரித்து பொருட்படுத்தாமல் விட்டு விடுங்கள்.



## சிறுவர் அரங்கம்

### உங்கள் கடிதங்கள்

பீ. ஜெகனா
தரம் - 07
உடுவில் மகளிர் கல்லூரி.

அன்புடன் ஆசிரியருக்கு,

எனக்கு எல்லாப் பத்திரிகைகளை விடவும் உங்கள் பத்திரிகை மிகவும் பிடிக்கும். சனிக்கிழமைகளில் வரும் சிறுவர் அரங்கம் - அதில் வரும் கதைகள், பொது அறிவு, விடுகதைகள், கைவண்ணம், சாரு அக்காவின் கடிதம் என்பன எனக்கு மிகவும் விருப்பம். என்றும் உங்கள் பத்திரிகை வளர நான் இறைவனை வேண்டுகிறேன்.

அன்புடன் பீ. ஜெகனா.

---

வே. ராஜா
தரம் - 10
விக்னேஸ்வராக் கல்லூரி

ஆசிரியர் அவர்கட்கு,

நீங்கள் போட்டிகளுக்காக அனுப்பும் விண்ணப்பத்துக்கு மறுபுறத்தில் முக்கியமான விடயங்களைப் போடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், முக்கியமான விடயங்களைக் கத்தரித்து அனுப்புவதால் பல விடயங்கள் அழிந்து போகின்றன.

மாணவன் வே. ராஜா

## பயமில்லாத வீடு

தென்னோலைக் கீற்றினிலே
தூங்குகின்ற கூடு
நூதனமாகப் பறந்து வரும்
தூக்கணத்தின் கூடு
பார்ப்பதற்கு அதனமைப்பு
பரவசமாய் உள்ளதே
பறந்து பறந்து குருவி அதன்
வாசலிலே துள்ளுதே!

நுட்பமான இதன் அமைப்பை
செய்தது யார் தெரியுமா?
கையில்லாத குருவியென்றால்
உலகம் இதை நம்புமா?

வெய்யில் மழை காற்றுக்கு
பயமில்லாத வீடிது
குஞ்சுகளைத் தாயணைத்து
தூங்குகின்ற கூடிது.

- ஜீனி

## ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும் , ஓவியங்களும்.

ம. வினோதா
தரம் - 3
யா/கரவெட்டி தாமோதர வித்தியாலயம்



செ. சாகித்தியா
தரம் - 3
யாழ் /இந்து ஆரம்ப பாடசாலை



உ. சசிக்குமார்
தரம் - 5
யா/விக்கினேஸ்வராக் கல்லூரி



## உங்கள் கைவண்ணம்



எஸ். அசோகமாலா
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.



## பயறும் பலகாரமும்

நகரத்தில் வசித்துவந்த ஒரு சுண்டெலி, ஒருநாள் கிராமத்தில் வசிக்கும் தனது உறவினரான இன்னொரு சுண்டெலியைப் பார்க்கப்போனது. கிராமத்து எலி வயல்வெளியில் குடியிருந்தது.

தன் வீட்டுக்கு விருந்தினராக வந்த, நகரத்து எலிக்கு - கிராமத்து எலி தன்னிடமிருந்த பயறு, கோதுமை ஆகிய தானிய வகைகளை எல்லாம் எடுத்துக்கொடுத்து உபசரித்தது. தானிய வகைகளின் ருசி நகரத்து எலிக்குப் பிடிக்கவில்லை. வேண்டா வெறுப்பாக சிலவற்றைக் கொறித்தது. பின்னர்.

'இதெல்லாம் என்ன சாப்பாடு. இவைகளைக் கொறித்துக்கொண்டு இருப்பதால் தான் நீ மிகவும் இளைத்து மெலிவாக இருக்கிறாய். ஒருநாள் என் வீட்டுக்கு வா நாங்கள் எப்படி இருக்கிறோம் என்று வந்து பார்...' என்று சொன்னது.



கிராமத்து எலி இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு ஒருநாள் நகரத்து எலியின் இருப்பிடத்துக்கு விருந்தினராகச் சென்றது. இரண்டு எலிகளும் பகல் நேரம் முழுவதும் ஓரிடத்தில் 'இருட்டு வரட்டும்', என்று பதுங்கிக் காத்திருந்தன. இருட்டு நேரம் வந்தவுடன், நகரத்து எலி கிராமத்து எலியைப் பார்த்து, 'என்னுடன் வா', என்று அழைத்துப்போனது.

இரண்டும் ஒரு துவாரத்தின் வழியே ஒரு வீட்டின் சாப்பாட்டு அறையை அடைந்தன. அங்கு ஒரு பெரிய மேசை இருந்தது. மேசையின் மீது வகைவகையான பலகாரங்கள் இருந்தன. இரண்டும் மேசையின் மீது ஏறி மேலே வந்தன. வகைவகையான பலகாரங்களைப் பார்த்து வியப்படைந்த கிராமத்து எலி பின்வருமாறு கூறியது -

'நீ சொன்னது சரிதான். நாங்கள் கிராமத்திலே சாப்பிடுவதெல்லாம் ஒரு சாப்பாடா? இது அல்லவா சாப்பாடு... வகை வகையாய் இருக்கிறதே. இனிமேல் நானும் உன்னோடு நகரத்திலேயே வந்து குடியேறிவிட வேண்டியதுதான்...' இவ்வாறு கிராமத்து எலி சொல்லி முடித்தவுடன் ஏதோ சத்தம் கேட்டது.

அந்தச் சாப்பாட்டு அறைக்குள் திடீரென ஒளி வெள்ளம் பாய்ந்தது. அந்த வீட்டுக்கார அம்மா கதவருகில் நின்று கொண்டிருந்தார். வெளிச்சத்தையும், அவரையும் பார்த்தவுடன் இரண்டு எலிகளும் பயந்து தப்பித்தோம், பிழைத்தோம் என்று துவாரத்தின் வழியே வெளியே ஓடி வந்துவிட்டன.

வெளியே தப்பித்து வந்துநின்ற கிராமத்து எலி 'ஊ கூம், இந்த நகரப் புறத்து வாழ்க்கையே வேண்டாம். கிராமத்தில் வயல் வெளியிலே இருக்கிற என் வீடே போதும். இங்கே இருக்கிற மாதிரி வகை வகையாய்ப் பலகாரங்கள் இல்லாமல் இருக்கலாம்... ஆனால் அங்கே இப்படிப் பயப்பட வேண்டியதில்லை' என்று கூறிவிட்டு, தனது கிராமத்துக்குத் திரும்பிப்போனது.

●●

## அணிலின் மகிழ்ச்சி



ஒரு அணில் மரக்கிளைகளின் மீது அங்கும், இங்கும் மகிழ்ச்சியாகத் தாவிக்குதித்துக் கொண்டிருந்தது. அப்போது மரத்தின் கீழ் தூங்கிக்கொண்டிருந்த ஓநாய் மீது அந்த அணில் தவறி விழுந்துவிட்டது. நித்திரை கலைந்து போன ஓநாய் - குதித்து எழுந்துநின்று அணிலைப் பிடித்துத் தின்ன முயன்றது.

'ஓநாயே என்னை விட்டுவிடு' என்று கெஞ்சியது அணில். ஓநாய் சொன்னது. 'உன்னை விட்டுவிட வேண்டுமா? சரி, ஆனால் ஒரு நிபந்தனை. நான் மிகவும் துன்பத்தில் இருக்கின்றேன். அணில் குஞ்சுகளாகிய நீங்கள் மட்டும் எப்போதும் சந்தோஷமாக இருக்கிறீர்கள், ஓடுகிறீர்கள், ஆடுகிறீர்கள். ஆனால், நான் மட்டும் அப்படி இருக்க முடியவில்லை. அந்த ரகசியத்தை எனக்குச் சொல். சொன்னால் உன்னை விட்டுவிடுகிறேன்'.

ஓநாய் இவ்வாறு சொன்ன பிறகும், அது தன்னை விடுமோ விடாதோ என்று பயந்த அணில் சொன்னது, 'என்னை முதலில் விட்டுவிடு. உன்னைப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கிறது. நான் மரத்தின் உச்சிக்குப்போய் அங்கிருந்தபடி உனக்குச் சொல்கிறேன்'.

ஓநாயும் அதற்குச் சம்மதித்து அணிலை விட்டு விட்டது. உடனே அணில் தாவிக்குதித்து மரத்தின் உச்சிக்குப் போய் நின்றுகொண்டே, 'உண்மைதான். ஓநாயாகிய நீ நிறையவே கஷ்டப்படுகிறாய். காரணம் என்ன தெரியுமா? உன்னுடைய கெட்ட குணம் உன் மனதை அரிக்கிறது. அணில்களாகிய நாங்கள் மிகவும் நல்லவர்கள். அதனால் மகிழ்ச்சியாக இருக்கின்றோம்', என்று கூறியது.

●●●

சிறுவர் அரங்கம் - பக்கம் 6

## இந்தப் படத்தில் முழு வட்டங்கள், முக்கால் வட்டங்கள், அரை வட்டங்கள், கால் வட்டங்கள் எத்தனை உள்ளன என்று கூறுங்கள் பார்ப்போம்!



## மூளைக்குவேலை

மாவட்ட விளையாட்டுப் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து 6, 7, 8 வகுப்புகளைச் சேர்ந்த ஒரு விளையாட்டுக் குழு வந்தது. அதில் இருவரைத் தவிர மற்றைய அனைவரும் 6 ஆம் வகுப்பு. இருவரைத்தவிர மற்றையவர் அனைவரும் 7 ஆம் வகுப்பு. இருவரைத் தவிர மற்றைய அனைவரும் 8 ஆம் வகுப்பு படிப்பவர்கள். அப்படியெனில் அந்தக் குழுவில் மொத்தம் எத்தனை பேர்? ஒவ்வொரு வகுப்பிலும் படிப்பவர்கள் எத்தனைபேர்?

மூளைக்கு வேலை சென்றவார விடைகள்




உதாரணம்
124 - 26 = 98+
103 - 5 = 98 +

## விடுகதைகளும் விடைகளும்

1. காற்றுக்குள் நுழைந்தவன் கானம் பாடுகிறான் – அவன் யார்?
2. குழந்தைக்கு எந்தக்கை பலமான கை?
3. நெருப்பாய் பறக்கும், பிடித்தால் இருக்கும், விட்டால் பறக்கும் – அது என்ன?
4. வெளியே வெள்ளிக்கட்டி, உள்ளே தங்கக் கட்டி – அது என்ன?
5. அரைத்தது முளைக்கும், பொரித்தது நடக்கும் அவை எவை?
6. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல, பட்டை அடித்திருப்பான் சாமியாரும் அல்ல அவன் யார்?
7. உரிக்க உரிக்க தோல் அது என்ன?
8. கழற்றிய சட்டையைத் திரும்பப் போடமாட்டான், அவன் யார்?
9. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான், அவன் யார்?
10. மரத்திலே காய்க்காத பழம் அது என்ன பழம்?

### விடைகள்

1. புல்லாங்குழல்
2. அழுகை
3. மின்மினி
4. முட்டை
5. பருத்திவிதை – கோழிக்குஞ்சு.
6. அணில்
7. வெங்காயம்
8. வாழைப்பழம்
9. மெழுகுவர்த்தி
10. ஐஸ்பழம்

ம.சிவகௌரி
தரம் – 7
யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

## இந்தப் படத்தில் எத்தனை ரபர் பாண்ட்கள் உள்ளன?



சிறுவர் அரங்கம் - பக்கம் 3

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் - தே.அமலராஜ்
தரம் - 10
பாடசாலை - கிளி/மத்திய கல்லூரி
ஆர்வமுள்ள துறைகள் - விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.



பெயர் - தே.நிரோஜினி
தரம் - 09
பாடசாலை - கிளி/ மகா வித்தியாலயம்
ஆர்வமுள்ள துறைகள் - விளையாட்டு.

பெயர் - சா.சர்மிளா
தரம் - 09
பாடசாலை - யாழ்/லேவணை சைவப்பிரகாச வித்தியாலயம்
ஆர்வமுள்ள துறைகள் - முத்திரை சேகரித்தல்.

பெயர் - மு.தர்சினி
தரம் - 10
பாடசாலை - விக்னேஸ்வராக் கல்லூரி
ஆர்வமுள்ள துறைகள் - சங்கீதம் பாடுதல், கதைகள், பத்திரிகை வாசித்தல்.

பெயர் - ந.ஜெனா
தரம் - 09
பாடசாலை - யாழ்/ வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்
ஆர்வமுள்ள துறைகள் - புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல்.

பெயர் - கு.விதுசன்
தரம் - 04
பாடசாலை - கிளி/தர்மபுரம் மகா வித்தியாலயம்
ஆர்வமுள்ள துறைகள் - விளையாட்டு, கல்வித்துறை.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................
கற்கும் பாடசாலை :.................................
கற்கும் தரம் :.................................
வீட்டு முகவரி :.................................
பிறந்த திகதி :.................................
ஆர்வமுள்ள துறைகள் :.................................

............... ...............
திகதி ஒப்பம்

............... ...............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,தாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## மயில்

மயிலின் இரை தானியங்கள், புழு, பூச்சிகள், பல்லிகள், பாம்புகள் ஆகியனவாகும். பெண் மயில் புதர்கள் அடர்ந்த நிலத்தின்மீது சிறு கூடு கட்டும். 6 முதல் 8 வரையில் முட்டைகள் இடும். 28 நாட்களுக்குப் பின் குஞ்சுகள் வெளிவரும்.

பல மயில்கள் ஒரே இடத்தில் முட்டைகளை இடுகின்றன. பின்னர் அவற்றைத் தங்களுக்குள் மாற்றி மாற்றி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்றன.

முட்டையிலிருந்து மயில் குஞ்சுகள் வெளிவந்தவுடன் ஆணா, பெண்ணா என்று தெரியாது. இரு வருடங்களுக்குப் பின்புதான் தெரியும். மூன்றாவது ஆண்டில் இருந்தே ஆண்மயிலுக்கு தோகை வளர ஆரம்பிக்கும். மயிலுக்கு கொண்டை முளைக்கும் போது வலி கடுமையாக இருக்கும். மயில்கள் 35 ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

ஜே.டனுஷன்
தரம் 5 - சென் பற்றிக்ஸ் கல்லூரி.

# முல்லாவும் பெரியவரும்



ஒருநாள் முல்லாவுக்கும், அவருக்குத் தெரிந்த பெரியவர் ஒருவருக்கும் இடையே விவாதம் ஏற்பட்டது. பெரியவர் சொன்னதை முல்லா ஏற்றுக் கொள்ளவில்லை.

முல்லா ஏற்றுக் கொண்டதை பெரியவர் ஒப்புக்கொள்ளவில்லை.

இந்த விடயம் குறித்து நீண்ட விவாதம் நடத்துவதற்காக இருவரும் ஒரு நாளைத் தேர்வு செய்தார்கள். அந்தக் குறிப்பிட்ட நாளும் வந்தது. ஆனால் முல்லா அந்தக் குறித்த நாளை மறந்து விட்டு வேறுஒரு வேலையாக வெளியே சென்று விட்டார்.

நீண்டநேரமாக முல்லா வருவார் எனக் காத்திருந்த அந்தப் பெரியவர், முல்லா வராததைக் கண்டு கோபம் கொண்டார். முல்லாவைத்தேடி அவர் வீட்டுக்குச் சென்றார். அங்கு முல்லா இல்லாததைக் கண்டு மிகவும் கோபம் கொண்டார்.

அங்கு கிடந்த சுண்ணாம்புக் கட்டியை எடுத்து முல்லாவின் வீட்டுச் சுவரில் முட்டாள் என எழுதிவைத்து விட்டுத் திரும்பி விட்டார். சிறிது நேரம் கழித்து வீட்டிற்கு வந்தார் முல்லா.

தனது வீட்டின் கதவில் 'முட்டாள்' என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தார். தனது மனைவியின் மூலம் விபரம் அறிந்து, அந்தப் பெரியவர் வீட்டை நோக்கி நடந்தார்.

முல்லாவைக் கண்டதும் அந்தப் பெரியவர் முல்லா வீட்டுக்கதவில் 'முட்டாள்' என்று எழுதிவிட்டு வந்ததற்காக தன்னிடம் சண்டை போடத்தான் அவர் வந்துள்ளார் என நினைத்தார்.

ஆனால் முல்லாவோ தனது வார்த்தையிலோ, நடத்தையிலோ எந்தக் கோபத்தையும் காட்டாது மிக அமைதியாக அந்தப் பெரியவரிடம் பெரியவரே தங்களுடன் இன்று விவாதம் செய்ய இருந்ததை நான் மறந்து விட்டேன்.

தாங்கள் சிரமம் எடுத்து என் வீட்டிற்கு வந்து தங்களுடைய பெயரை என் வீட்டுக்கதவில் எழுதி ஞாபகப்படுத்திவிட்டு வந்த பிறகுதான் உங்களைப் பற்றிய நினைவே எனக்கு வந்தது என்றார் முல்லா. இந்தப் பதிலைக் கேட்ட பெரியவர் தனது தவறை உணர்ந்து கொண்டார்.

# முகத்தைப் பொருத்துங்கள்





# நாலெழுத்துப் புதிர்

இங்கு 'ங்' என்ற எழுத்தை இரண்டாம் எழுத்தாகவும், மூன்றாம் எழுத்தாகவும் கொண்டு, இந்த நாலெழுத்துப் புதிர் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 'ங்' கிலும் ஒரு வார்த்தை அடங்கியுள்ளது. கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புக்களைக் கொண்டு, இந்த 15 வார்த்தைகளையும் கண்டுபிடியுங்கள்.



## குறிப்புகள்

1. நாங்கள் என்பது வேற்றுமை உருபு ஏற்கும் போது பெறும் வடிவம்.
2. ஆரம்பி
3. தென்னை மரத்துக்காய்.
4. ஒரு மிருகம்.
5. வளையம்.
6. குழி
7. ஓர் உலோகம்
8. மனித இனமும், தாவரமும் அல்லாத ஏனைய உயிரினம்.
9. கடைசித் தமிழ் மாதத்தின் பெயர்.
10. சமீபித்தல்.
11. கையை மடக்கி நீட்டுவதற்குரிய மூட்டு அமைந்திருக்கும் பகுதி.
12. வாரத்தின் முதல்நாள்.
13. சிவப்பு நிற சுட்ட மண் கட்டி.
14. இந்த மிருகம் தன் வயிற்றில் குட்டியை எடுத்துச் செல்லும்.
15. பல கடைகளின் தொகுதி.



| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | ங் | | |
| 2 | | | ங் | |
| 3 | | ங் | | |
| 4 | | ங் | | |
| 5 | | ங் | | |
| 6 | | | ங் | |
| 7 | | ங் | | |
| 8 | | | ங் | |
| 9 | | ங் | | |
| 10 | | | ங் | |
| 11 | | | ங் | |
| 12 | | ங் | | |
| 13 | | ங் | | |
| 14 | | ங் | | |
| 15 | | ங் | | |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானத்துக்கு வேட்டு; படைத்தரப்பு தீவிரம்!

நாட்டில் இன்று நிலவும் தற்காலிக சமாதான மற்றும் அமைதிச் சூழலைக்கூட முற்றாகச் சிதைத்தழித்து மீண்டும் போர்ச் சூழல் ஒன்றை உருவாக்கும் உள்நோக்குடன் ஆயுதப்படையினரில் ஒரு சாரார் மிகத்தீவிரமாக செயற்படுகிறார்களோ என்ற சந்தேகம் நாளுக்குநாள் நடந்தேறும் சம்பவங்கள் மூலம் உறுதியாகின்றது என்றே தோன்றுகின்றது.

கிழக்கில நாள்தோறும் தொடர்ந்து நடைபெறும் வன்செயல்களின் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப்பிரிவினரும், அவர்களுடன் சேர்ந்து செயற்படும் துணைப்படைஎன்ற பெயரிலான தமிழ் ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களும் இணைந்தே இயங்குகின்றனர் என்பது தொடர்பான குற்றச்சாட்டுகள் அரசிடம் சமர்பபிக்கப்பட்டு வருகின்றபோதிலும், அரசும் படைத்தரப்பினரும் அதனை நிராகரித்தும், மறுத்தும் வருவது தெரிந்ததே.

அரசினதும் - படைத்தரப்பினதும் இந்த மறுப்புக்களும், நிராகரிப்புக்களும் ஒருபுறமிருக்க, கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே அதிலும் குறிப்பாக படைத்தரப்பினரின் முகாம்கள் மற்றும் காவலரண்களை அண்மித்த பகுதிகளிலேயே இத்தகைய வன்செயல் சம்பவங்கள் நிகழ்ந்து வருவதும், அததகைய வன்செயலாளர்கள் இராணுவக் கட்டுப்பட்டு பிரதேசங்களுக்குள்ளேயே தப்பியோடி மறைந்துவிடுவர். அவர்களில் எவரையும் படைத்தரப்பினரால் கைது செய்யமுடியாமலிருப்பதும் அவர்களின் மறுப்புக்களையும் நிராகரிப்புக்களையும் அர்த்தமற்றதாக்கியே வருகின்றதெனலாம்.

இத்தகைய உளவியல் ரீதியிலான நடவடிக்கைகள் மூலம் கிழக்குவாழ் தமிழ்பேசும் மக்களிடையே பீதியையும், குழப்பத்தையும், உள்ளக முரண்பாடுகளையும் தூண்டி அந்தப் பிராந்தியத்தல் சமாதான சூழலுக்கு ஆபத்தினை ஏற்படுத்தி அதன் மூலம் அரசியல் அனுகூலங்களை பெறத்திட்டமிடும் அரசினது உள்நோக்கமானது, அண்மைக்காலங்களில் மிகவெளிப்படையாகவே அனைத்து தரப்பினராலும் உணரப்பட்டு வரும் ஒன்றாகும்.

ஒப்புக்கு, கிழக்கில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கக் கடும் நடவடிக்கைகளை அரசு எடுப்பதாகக் கூறிக்கொண்டு அரசு ஆயுதப் படையிரைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் தொடர்ந்தும் அங்குள்ள தமிழ்பேசும் சமூகத்தவர்களுக்கும் அவர்களின் இயல்புவாழ்வுக்கும் மேலும் மேலும் தொந்தரவுகளையும், அச்சத்தை ஏற்படுத்தும் அழுத்தங்களையும் அதிகரிப்பனவாகவேயுள்ளன. இது சமாதான சூழலுக்கு அச்சுறுத்தலான விடயமேயாகும்.

சுற்றிவளைப்பு, தேடுதல்களை அதிகரிப்பதும் சோதனைச் சாவடிகளில் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதும், தலையாட்டிகளின் முன்னால் மக்களைக் கொண்டு சென்று நிறுத்துவதும், சாதாரண அப்பாவி தமிழ்பேசும் பொதுமக்களை இம்சித்து அவமதித்தும் - அமைதிச் சூழலுக்கு பங்கமேற்படுத்தும் சமாதான விரோத செயற்பாடுகளாகவே அர்த்தப்படும் என்பதில் ஐயமில்லை.

கிழக்கில் நிலைமைகள் இத்தகைய அவலச் சூழலில் இருக்க, இப்போது யாழ்.குடாநாட்டிலும் இவ்வாறான பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் நிகழ்வுகள் படைத்தரப்பால் அரங்கேற்றத் தொடங்கியுள்ளமையானது-சமாதான சூழலுக்கு ஆரோக்கியமான சமிக்ஞையாக இல்லை.

இராணுவ வாகனங்கள் பாடசாலைச் சிறுவர்கள் உட்பட பலதரபபினரையும் விபத்துக்குள் சிக்கவைக்கும் விபரீத விளையாட்டை கடந்தபல மாதங்களாகவே மேற்கொண்டுவருகின்றன. குறப்பாக இத்தகைய விபத்து - வாகனங்களைச் செலுத்துவோர் எத்தகைய மனநிலையுடன் அவற்றைச் செலுத்துகிறார்களோ என்ற சந்தேகம் தவிர்க்கமுடியாததேயாகும்.

கடந்த நான்காம் திகதியன்று யாழ்.குடாநாட்டு மாணவி ஒருவரை இராணுவத்தினர் பயணித்த உழவு இயந்திரம் மோதியதில் அந்த மாணவி பலியாக, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவங்களின்போது தடியடி, கண்ணீர்புகைக்குண்டுப் பிரயோகம் போன்றவற்றை மேற்கொண்ட படையினர் ஒரு அப்பாவி முதியவரையும் சுட்டுக்கொன்றனர்.

நேற்றுமுன்தினம் நீர்வேலிப் பகுதியில் ஒரு வயோதிபப் பெண்ணை இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றுள்ளார். நேற்றையதினம் மீண்டும் இராணுவ வாகனம் தென்மராட்சிப் பகுதியில் மற்றொருவரை மோதி படுகாயத்துக்குள்ளாக்கியுள்ளது. இதேநாளில் வடமராட்சி துன்னாலைப் பகுதியிலும் ஒரு சம்பவம் நிகழ்ந்ததாகவும், இதனால் அந்தப் பகுதியில் மக்கள் கொதிப்படைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிகிறது.

இவையெல்லாம் வெறுமனே சாதாரண வழமையான சம்பவங்களாகக் கருதி ஒதுக்கிவிடமுடியாது. இவையனைத்தும் பொதுமக்களை கொந்தளிக்க வைக்கும் - சீற்றங்கொள்ள வைக்கும் நிகழ்வுகளேயாகும். பொறுமை எல்லைமீறிய நிலையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த பொங்கியெழும் மக்களை ஆயுதமுனையில் அடக்கவும், அதன்மூலம் பதற்றநிலையை உருவாக்கி அமைதியைக் குலைத்து சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் படைத்தரப்பு தீவிரங்காட்டுவதாகவே தெரிகிறது.

இந்த இராணுவ நெருக்கடிகளை அரசு இனியும் தொடருமேயானால் அதன் விளைவுகள் முழுநாட்டையும் நாசமாக்கும் பாராதுரமான நிலைக்கே கொண்டுசெல்லும் என்பது உறுதி. முழு நாட்டையும் நாசம் செய்வதுதான் அரசினதும், படைததரப்பினதும் நோக்கமானால், அதனைத் தடுக்க யாரால் முடியும்?

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சொல்பவர் சொல்லலாம் கேட்பவருக்கு மதி என்ன?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாட்டு மக்களிடம் வாக்குக் கணிப்பு நடத்தினால் சமஷ்டி ஆட்சி முறைக்கு எண்பது வீதமான மக்கள் வாக்களிப்பார்கள் என்று சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியிருக்கிறார்.

சமஷ்டிக் கோரிக்கையை தமிழ் மக்கள் முன்வைத்து, ஜனநாயக முறையில் தமிழர் தாயகத்தில் தேர்தல்களில் போட்டியிட்டு, தமிழ் மக்களின் ஆணையை 1956 தொடக்கம் 1976ஆம் ஆண்டுவரை நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி வந்தனர்.

தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் சமஷ்டி ஆட்சி அமைப்பில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கக் கோரியபோது பெரும்பான்மை ஜனநாயகம் அதனை நிராகரித்தது.

1949ஆம் ஆண்டில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி உதயமானது. இலங்கையில் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பே ஒரேவழி, இதுதான் வாழு, வாழவிடு என்ற தாரகத்தை அடிப்படையாகக் கொண்டது என்று செல்வநாயகம் விளக்கம் கொடுத்தார்.

சமஷ்டி அமைப்பில் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சம உரிமையுடன் வாழ்வதற்கு வழிவகுக்கும் என்ற தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கையை தமிழர் தாயகத்திலுள்ள இஸ்லாமியத் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டு, தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்து அனுப்பினர்.

நாடாளுமன்றத்தில் ஜனநாயக முறையில் தமிழர் தாயகப் பிரதிநிதிகள் குரல் கொடுத்தபோது, பெரும்பான்மை ஜனநாயகம் அதை உதாசீனம் செய்து நிராகரித்தது. இதைத் தொடர்ந்து தமிழர் தாயக மக்களிடம்பெற்ற ஆணையின்படி, சமஷ்டிக் கோரிக்கையில் வெற்றிபெறுவதற்காக செல்வநாயகம் தலைமையில் காந்தீய வழியில் சாத்வீகப் போராட்டங்களைத் தொடங்கி நடத்தியது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா காந்தி நடத்திய சாத்வீகப் போராட்டங்களுக்கு, வெள்ளைக்காரன் கொடுத்த ஓரளவு மதிப்பைக்கூட இலங்கையில் வெள்ளையனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சிங்களவன் கொடுக்கவில்லை. நிராயுதபாணிகளாக அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து உண்ணா நோன்பிருந்தவர்கள்மீது, ஆட்சிப் பீடத்திலிருந்த சிங்கள அரசுகள் ஆயுதப் படைகளை ஏவிவிட்டு அடித்து நொறுக்கியும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், காடையர்களை ஏவிவிட்டும் சாத்வீகப் போராட்டத்தை முறியடித்தன.

இவை போதாதென்று 1958 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டுவரை ,காலத்துக்குக் காலம் நாடு முழுவதிலும் அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராக இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு, இனப்படுகொலைகளை ஆட்சியாளர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றினர். 1958ஆம் ஆண்டில் நடந்த இனப்படுகொலைகளை அறிந்த, இலங்கை சுதந்திரமடைந்தபோது இலங்கைக்கு அரசியல் யாப்பை உருவாக்கிக்கொடுத்த சேர். ஐவர் ஜென்னிங்ஸ் தாம் பெரும் தவறு செய்துவிட்டதாகக் கூறியதைக்கூட சிங்களத் தலைவர்கள் சிந்தைக்கு எடுக்கவில்லை.

1958ஆம் ஆண்டின் இனப்படுகொலைகளை உணர்ந்த இந்தியாவின் ராஜரிஷி ராஜாஜி இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி அமைப்புமுறைதான் உகந்தது என்று கல்கியில் தலையங்கம் எழுதியிருந்தார். இன்று சமஷ்டிதான் இலங்கைக்கு ஏற்றது என்று கூறும் இந்தியத் தலைவர்கள் அன்று ராஜாஜிக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கமுன்வரவில்லை.

1956 முதல் 1976வரை சிங்கள ஆதிக்க சக்திகளின் அடக்குமுறைக்கு ஆட்பட்டும், சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளின் தூண்டுதலால் சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட கொலை, கொள்ளை, பெண்கள் மீதான மானபங்கம் என்று பல கொடுமைகளாலும் உயிர் துறந்தவர்கள், ஊனமுற்றவர்கள் என்று சொல்லொணாத் துயரங்களை தமிழ் மக்கள் அனுபவித்தனர்.

சிங்கள, பௌத்த மேலாண்மைத் தலைமைகளோ சமஷ்டி என்றால் நாடு துண்டாகிப்போகும் என்று கூச்சலிட்டன. சந்திரிகாவின் தகப்பன் லண்டனில் உயர் படிப்பை முடித்துத் திரும்பியதும், இலங்கைக்கு சமஷ்டி அமைப்பே உகந்தது என்று கூறியவர் பின்னர் நாடாளும் ஆசையினால் சமஷ்டியை மற்றவர்களைப் போலவே பிரிவினை என்றார். ஆனாலும் சாத்வீகப் போராட்டத்தில் ஒரு கட்டத்தில் அச்சம் கொண்டு அதிகாரத்தைப் பகிர்வதற்கு தமிழர் தாயகத்தில் பிரதேச சபைகள் அமைப்பதற்குச் சம்மதித்து தந்தை செல்வாவுடன் ஒப்பந்தமும் செய்தார்.

இன்றுபோல் அன்றும் ஜே.ஆர்.கண்டிக்குப் பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கினார். பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இதேகதி டட்லி-செல்வா ஒப்பந்தத்துக்கும் நடந்தது.

பிரதேசசபை நாட்டைத் துண்டாடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர்.தலைமையில் எதிர்த்து நாடு முழுவதிலும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

பிரதேச சபை என்று சொல்வதற்கே பயந்து மாவட்டச் சபை என்று பெயர் மாற்றி யு.என்.பியின் டட்லி – தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்தார். அதைக்கூட சம அந்தஸ்து பேசி, இடதுசாரிகள் விடாமல் நாடு பிளவுபட்டுவிடும் எனக் குரல் கொடுத்தனர்.

இப்பொழுது இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை அமைப்பதற்கான புலிகளின் திட்டவரைபு நாட்டைத் துண்டாடிவிடும் என்று பங்காளிகளான ஜே.வி.பியும் மற்றும் உறுமயக்களும் உறுமுகின்றனர். இவர்கள் எல்லோரும் எப்படி எண்பது சதவீத மக்கள் சமஷ்டிக்கு வாக்களிக்க அனுமதிப்பார்கள்?

வாக்குக் கணிப்பு நடத்தி மீண்டும் ஒரு ஆறுவருடத்துக்கு ஜனாதிபதி பதவியலிருக்கலாமா என்று பரிசோதிக்கப் பார்க்கிறாரா?

1976ஆம் ஆண்டில் தந்தை செல்வாவும் மற்றும் தமிழ்த் தலைவர்களும் இனிவேறு வழியில்லை என்ற நிலையில் இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்போம் என்று ஒருமித்த குரலில் உறுதிபூண்டனர்.

1976இல் சமஷ்டிக் கோரிக்கை முடிந்து தமிழீழ அரசை மீள அமைக்கும் தீர்மானம் நிறைவேறியது.

இதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தமது உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள். பல்லாயிரம் பொதுமக்கள் தமது உயிரைப் பலிகொடுத்திருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்தில் ஒரு இடைக்கால நிர்வாக தன்னாதிக்க அதிகார சபை நிறுவமுடியவில்லை. விடுவார்களோ! எண்பது வீதமானோர் சமஷ்டிக்கு வாக்களிப்பார்களாம் சந்திரிகா சொல்கிறார்.

சொல்பவர் சொல்லலாம் கேட்பவர்க்கு மதியென்ன?

காலநிலை சீரில்லாததால் தமிழ்ச்செல்வன் குழுவினரைக் கொழும்புக்குக் கொண்டுசெல்ல ஹெலி- கிளிநொச்சிவர மறுத்ததாம்.

ஆனால் மறுநாள் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவருக்குக் கடித்த பாம்பு ஹெலியைக் கிளிநொச்சிக்கு வரச் செய்துவிட்டதே! காலநிலை பாம்புக்கும் தெரிகிறது!

## வாசகர் நோக்கு

### பரீட்சை முடிவுகள் எப்போது?

2003ஆம் ஆண்டு நடைபெறவேண்டிய யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகள் அங்கு இடம்பெற்ற குழறுபடிகளால் பிற்போடப்பட்டு, 2004ஆம் ஆண்டு பரீட்சை நடைபெற்று கிட்டத்தட்ட ஒரு வருடத்தை எட்டுகிறது. ஆனால், இதுவரை இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவில்லை. 2003ஆம் ஆண்டு பரீட்சை நடைபெற்றிருந்தால், 2004ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டதாரி நியமனத்தில் வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கும். அது முடியாமல் போனது உயர்கல்விச் சமூகம் எமக்குச் செய்த அநியாயமே.

அதைத் தவறவிட்டாலும் தற்போது அரசாங்கம் மீண்டும் பட்டதாரிகளை வேலைக்கு விண்ணப்பம் கோரியுள்ளபோதிலும், பரீட்சை முடிவுகள் வெளியிடாதநிலையில், என்போன்றவர் விண்ணப்பிக்கமுடியாது வேதனை அடைந்துள்ளோம்.

எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில் படித்து, ஒரு வேலையைத் தேடி அலையும் என்போன்றவர்கள் இப்படியாகக் கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்களையும் நழுவவிடவேண்டிய சூழ்நிலையை யாழ்.பல்கலைக்கழகத்தின் அசமந்தப் போக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஆகையால் தயது செய்து எமது வெளிவாரி இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகளை உடன் வெளியிட்டு, பட்டதாரிகள் நியமனத்துக்கு விண்ணப்பிக்க ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

யாழ்ப்பாணம். சுதாகரன்.

நேர்காணல் விஜேந்திரன்

# ஆன்மீகத்தைப் பரப்பும் ஊடகமாக விளங்கும் நாட்டுக்கூத்து



கிராமத்தில் கூத்து பிறந்து வளர்ந்து அதில் ஊறியும், அதனால் உருவாக்கப்பட்டும் நிற்கும் ஒரு கலை வடிவமாகும்! நாட்டுக்கூத்துக்களை கிராமியக் கலைஞர்களே வளர்த்தனர். எனவே கூத்தின் உரிமை அவர்களையே சாரும். ஆன்மீகத்தைப் பரப்பும் ஊடகமாக சகல கிராம மட்டங்களிலும் மிக ஆர்வத்துடன் நாட்டுக் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டன.

இதன் வெளிப்பாடாக சமய, சமூக விழுமியங்களைத் தாங்கிய வடிவங்களாகப் பல படைப்பாற்றல்கள் வெளி வந்தன. இவை கால மாற்றங்களினால் இன்று பின் தள்ளப்பட்ட நிலையில் மிகமிக அரிதாகவே ஆற்றுகை செய்யப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமங்களில் அநேகமாக ஆடப்படும் நாட்டுக் கூத்துக்கள் கிறிஸ்தவக் கதைகளைத் தழுவியதாக அமைந்துள்ளன. நாவாந்துறையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நாட்டுக்கூத்துக்கே தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றிய மூத்த நாட்டுக் கூத்துக் கலைஞர் சுவக்கீன் மரிய தாஸ் (பாக்கியம்) தனது கடந்தகால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

தனக்கென தனித்துவமான பணியைக் கொண்டு, பலரது பாராட்டுக்களைப் பெற்ற கலைஞர் மட்டு மன்றி, நாட்டுக்கூத்து ஜாம்பவான்களான ஜோசப், பக்கீரி, போன்றவர்களுடன் சமபாத்திரமேற்று நடித்த பெருமைக்குரியவர். பலகலைஞர்களை உருவாக்கியதுடன்; இம்மானுவேல் நாட்டுக்கூத்தில் இம் மானுவேலாகப் பாத்திரமேற்று நடித்ததுடன், ஊர் மக்களால் இம் மானுவேல் என அழைக்கப்பெறும் மரியதாஸ் குரலிசை வேந்தன் என்ற கௌரவப் பெயரையும் கொண்டவர்.

**இன்றும் நாட்டுக்கூத்தென அதன் தனித்துவங்களைப் பேண வேண்டுமென்ற ஆதங்கத்திலுள்ளார். கண்பார்வை இழந்த போதிலும் மிக நிதானமாகக் கூத்துப் பாடல்களைப் பாடுவதையும், கூத்துக்கலை தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதையுமே தனது இறுதிக்காலத்தில் மேற்கொண்டுவரும் நாவாந்துறை நாட்டுக்கூத்து வேந்தன், 'இம்மானுவேல்' புகழ் மரியதாஸுடனான சந்திப்பு.**

"எனது 8 ஆவது வயதில் கட்டியக்காரனாக நாட்டுக்கூத்தில் என் பயணம் ஆரம்பமாகியது. கட்டியக்காரனாக ஆரம்பித்த போதிலும், கால மாற்றங்களுக்கேற்ப பல்வேறு பாத்திரங்களில் நடித்து வந்தேன்.

சிறிது காலத்தில் நாடகத்தின் பெயருக்குப் பாத்திரங்களான அதாவது - முதன்மை நடிகனாக என்னை எனது மக்கள் ஏற்றுக்கொண்டு, என்னுடைய வளர்ச்சிக்குப் பங்காற்றினர். அநேகமாக சோகப்பாத்திரங்களையே ஏற்று வலம்வந்த போதிலும், பெண் பாத்திரமேற்று நடிக்கவில்லையே என்ற குறை என்னுள்ளே இருந்து கொண்டே இருந்தது.

ஞானசௌந்தரி நாடகத்தில் எனக்கு அரசனுக்குரிய (புலேந்திரன்) பாத்திரம் வழங்கப்பட்டது. ஆனால் ஊரவர்களின் வற்புறுத்தலின் பெயரில் ஞானசௌந்தரியாக பெண் வேடமேற்று நடித்தேன். எனது எண்ணமும் நிறைவேறியது. அரசு, விஜயமனோகரன் , புனிதர்களின் வரலாறுகளைத் தழுவியதான பல நாடகங்களில் நடித்துள்ளேன்.எமது கலை வடிவங்களில் கூத்து மிக முக்கியமானது. நீண்ட காலத்துக்கு முன்னர் ஒலி, ஒளி வசதிகளற்ற காலத்தில் கூட, நானும் என்னுடன் இணைந்து நடித்த கலைஞர்களும் கூத்தின் மேல் கொண்ட காதலினால் தொடர்ந்தும் பங்காற்றி வந்தேன்.

இரவு முழுவதும் ஆடப்பட்டு வந்த கூத்து, இப்பொழுது குறித்த சில மணித்தியாலங்களாகச் சுருக்கி மேடை ஏற்றப்படுகிறது. எமக்கெனப் போதிய வசதி வாய்ப்புகள், உபகரணங்கள் இல்லாத போதிலும் தொடர்ச்சியாக நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றியே வந்தோம். இன்று போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும், கூத்துக்கலை குறிப்பிட்ட சில இடங்களில் மிகக் குறைவாகவே இடம் பெறுகிறது.

பாரம்பரிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவென நிறுவன ரீதியான அமைப்புகள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றை மனதார வாழ்த்துவதில் பெருமையடைகிறேன். கிராமத்தில் இருந்த கூத்துக் கலையை நகரத்துக்குக் கொணர்ந்ததுடன், கல்விகற்ற சமூகமும் அதைப் பயின்று ஆடிவருவதை நினைக்கும்போது, எமது கலைவடிவம் அழியவில்லை என்று தோன்றினாலும் பாரிய மனக்குறையே எனக்குள் இருந்து வருகிறது.

இளம் சமூகம் கூத்துக் கலையை வெறுக்கிறது. இதற்கு சினிமாவின் தாக்கம் இருந்தாலும், தொடர்ச்சியான மேடையேற்றங்கள் இல்லாமையும் காரணமாகும்.

என்ர அப்பா நடிக்கிறார். மாமாவும், அண்ணனும் நடிக்கினம். பெரியப்பா தான் அரசனாம், இவ்வாறான தேடல்கள் எதிர்பார்ப்புகளைச் சிறுவர்கள், இளையோர் மத்தியில் ஏற்படுத்துவதற்குக் கிராம, நகர வேறுபாடுகளின்றித் தொடர்ச்சியாகப் பல்வேறு வகையான கூத்துக்கள் மேடையேற்றப்பட வேண்டும். இதனால் கூத்துக் கலையைப் பயில, நடிக்க அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுமென்பது எனது அனுபவரீதியான உண்மை.

கூத்துக்கலை தொடர்பாகப் பயிற்சிகள், கருத்தமர்வுகள், போட்டிகளை நடத்துபவர்களைப் பாராட்டுகிறோம். இவற்றைப் பயில்பவர் தனியே பரிசு பெறுவதற்கு மட்டும் என நினைப்பது மிகவும் தவறானது. தமக்குத் தெரிந்தவற்றை ஏனையவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கலை வடிவத்தைக் காக்க வேண்டும். இன்றும் ஒருசில நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். தொடர்ந்து இயங்குகின்றனர். ஆனால் இவர்களின் வேகம்போதாது. இப்படியே போனால் இவர்களுடன் கூத்துக் கலையும் முடிந்துவிடும் என்ற அச்சமும் என்னைப் போன்றவர்களிடையே உண்டு.

கலையை ரசிக்கத் தெரிந்தவர்களும், நேசிப்பவர்களும் இருக்கும்போதே அதை வளர்க்க முடியும். ஒரு கூத்தை ஆடுவதற்கு எவ்வாறு ஒரு குழுவாக இரவு பகல் பாராது செயற்படுகிறோமோ, அதேபோல் எமது கலை வடிவங்களைப் பாதுகாத்து முன்வரவேண்டும்.இளம் சமூகம் இந்தக் கலையைப் பயின்று அழிந்துபோகும் கூத்துக்களை தத்தெடுக்கவேண்டும்"எனத் தனது கருத்துக்களை நிறைவு செய்தார்.

---

பகுதி 59 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

'சிங்கள மக்களைப் பொறுத்தவரை பாதிப்புற்றோர் தொகை மிகக் குறைவே. அவர்களுக்கு மிகத் தாராளமாகவே உதவி கிடைத்தது. எனவே விடுதலைப்புலிகள் என்ற வகையில் நாம் உதவ வேண்டிய தேவை இங்கு ஏற்படவில்லை.

ஆனால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிகளை வழங்கியது. தேவை ஏற்படாததால் தான் நாம் சிங்கள மக்களுக்கு உதவ முனையவில்லை எனக்குறிப்பிட்டார். (இதே வேளை 2003 ஆம் ஆண்டில் வெள்ள அழிவு ஏற்பட்டபோது, எழிலன் வேறு சில போராளிகளுடன் சிங்களப் பகுதிகளுக்குச் சென்று, புலிகளின் சார்பில் நிவாரணப் பொருட்களை வழங்கியமை நினைவுக்கு வந்தது. இந்த வகையிலும் மக்களுக்கு உதவலாம். இப்படியும் அரசியல்பணி ஆற்றலாம் என்பதே அப்போது தான் ஜே.வி.பியினருக்கும், ஏனைய சிங்களப்பாரம்பரியக் கட்சிகளுக்கும் விளங்கியது).

'முகாம்களை படையினர் பொறுப்பேற்பது தொடர்பான முடிவுக்கு அரசு வரமுன்னர், பாதிப்புற்ற மக்களுக்கு தொண்டாற்றுவது குறித்த விடயத்தில் படையினருக்கும் உங்களுக்குமிடையே புரிந்துணர்வு இருந்ததா?'எனக் கேட்டதற்கு 'திருமலையில் படையினரும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். படையினருக்கான உதவிப் பணிகளையும் போராளிகள் நாம் செய்திருக்கிறோம். நிலாவெளி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காயமடைந்த படையினருக்கு மருத்துவ ரீதியாக உதவுதல் போன்ற மனிதாபிமான நடவடிக்கைகளில் போராளிகள் உதவியுள்ளனர். பாதிக்கப்படாத பகுதிகளில் இருந்த படையினர் - பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவியுள்ளனர். நேரடியாகவும் உதவிகள் செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தனர். அத்துடன் எமது கட்டுப்பாட்டுப் பகுதி மக்களுக்கென நிறுவனங்கள் கொண்டு வந்த பொருட்களை எம்மிடம் சேர்ப்பதற்கு அந்த நிறுவனங்களுடன் இணைந்து உதவியுள்ளனர். ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு மாறத் தொடங்க, அவர்களின் நிலைப்பாடும் பழைய நிலைக்குத் திரும்பியது' என்றார்.

'திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எதை வலியுறுத்த வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?' எனக் கேட்டதற்கு பாதிப்புற்றோருக்கு முழுமையான அளவில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். பாரபட்சமின்றி தேவைக்கேற்ற வகையில் உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தென்னிலங்கையில் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாகிவிட்டன. வீதிகள் போடப்பட்டு, பாலங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆனால் எமது பகுதிகளில் நிலைமை தலைகீழ். உதாரணத்துக்கு - பாலம் இல்லாத இலங்கைத்துறை முகத்துவாரத்தில் பாதை ஒன்றை(ferry) கொண்டு வந்து விடும்படி கேட்டதற்கு R.D.A ஒரு ferry ஐ கொண்டுவந்து கிண்ணியாவில் விட்டது. அந்த ferry ஐ கடலால் தான் கொண்டு வரவேண்டும். அதைத் தரையால் கொண்டுவர முடியாது. ஏனெனில் வழியில் சில பாலங்கள் உள்ளன. அவற்றினூடாகப் பாதையைக் கொண்டு வர முடியாது. சுனாமியில் இந்தப் பாதை முற்றாக அடிபட்டுள்ளது.

இந்தப் பகுதியில் முன்னர் குல்லாவில்தான் பொதுமக்களும்,



பாடசாலை மாணவர்களும் போய் வந்தனர். இப்போது தண்ணீர் பெருக்கெடுத்ததால் இலங்கைத் துறை முகத்துவாரத்தில் ஆற்றுக்குள் அலையடிக்கிறது. முன்னர் ஆற்றுக்குள் அலையடிக்காது. ஆனால், சுனாமியின் பின் ஆற்றுத் தொடுவாய் பெரியளவில் கடலுடன் இணைந்துள்ளது. அதனால் குல்லாவில் பயணம் செய்வது அபாயகரமான நிலைமையாகவுள்ளது. இதனால் சீனன்வெளி, உப்பூறல் பகுதிகளிலுள்ள மாணவர்கள் இலங்கைத் துறை முகத்துவாரத்துக்குத் தான் படிக்கச் செல்லவேண்டும். இதனை எடுத்துரைத்து, விரைவாகப் பாதையைக் கொண்டு வந்து தருமாறு கோரியும், இன்றுவரை கடற்படை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. M.O.D மற்றும் எல்லோருடனும் நாம் தொடர்பு கொண்ட போதும், கடற்படை அதைக் கொண்டு வந்து கொடுக்கத் தயாரில்லை.

தென்னிலங்கையில் போக்குவரத்துக்கென அதிவிரைவாகப் பாலங்களை அமைத்துக் கொடுக்கிறார்கள். இங்கோ இருக்கும் பாதையைக் கடலால் கொண்டு வந்து தருவதில் கூட அலட்சியம் காட்டுகிறார்கள். எனவே இப்படியான விடயங்களைத் தெரியப்படுத்தி, இதற்குரிய நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரியுள்ளோம். தென்னிலங்கையில் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி, உயிரழந்தோருக்கு நிவாரணம் எல்லாம் வழங்கியாயிற்று. இங்கு நிவாரண நடவடிக்கைகளோ, உயிரிழந்தோருக்கான கொடுப்பனவுகள் வழங்குவதோ முடியாத நிலைமை உள்ளது என்றார் அவர்.

உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகப் பாதிப்புற்றோர் தொகை மற்றும் விபரங்களைக் கேட்டதற்கு அவற்றைத் தமது ஆவணங்களிலிருந்து எடுத்து வழங்கினார் எழிலன்.

⌘ ⌘ ⌘

திருமலை மகா பீடத்தில் சுனாமியால் உயிரிழந்த 968 பேரின் சடலங்கள் இனங் காணப்பட்டன. 11 பேரின் சடலங்கள் இனங்காணப்படவில்லை. 337 பேர் காணாமற் போயுள்ளனர்.

30,102 குடும்பங்களைச் சேர்ந்த 125,611 பேர்இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் 5 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 19, 559 பேர் 42 நலன்புரிநிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 13,018 குடும்பங்களைச் சேர்ந்த 62,084 பேர் நண்பர்கள் உறவினர் இல்லங்களில் தங்கியுள்ளனர். 12,084 குடும்பங்களைச் சேர்ந்த 46,131 பேர் சொந்த இடங்களுக்குத்திரும்பியுள்ளனர். *(தொடரும்...)*

---

# தவக்கால நற்சிந்தனை

"அப்படியே அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனம் மாறவேண்டுமென்று பறைசாற்றினார்கள்"

**மோ.தார்சீசியஸ்**

(மாற் 6:12)



அயல் நாட்டில் ஒரு விலைமாது கர்ப்பந்தரித்தாள். கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை ஏலம் விட்டாள். ஏலத்தொகை கூடிக் கொண்டே போனது. காரணம் – குழந்தைப் பாசமல்ல சிசுவின் இருதயம், சிறு நீரகம், ஈரல் போன்ற உறுப்புக்களை நல்ல விலைக்கு விற்கலாம் என்பதற்காக. நமது நாட்டிலும் அநாதைக் குழந்தைகள் இன்று பெருகிவிட்டன. இவற்றில் இரண்டு குழந்தைகளைக் களவாடி 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்ற இடத்தில் வகையாக மாட்டுப்பட்டு மறியலில் இருக்கிறார். இன்று குழந்தைகளை மனிதன் குழந்தைகளாக மதியாது, பாலியலுக்கும், பாலியல் படப்பிடிப்புக்கும் பயன்படுத்தும் கொடுமை அதிகரித்துள்ளது. குழந்தை என்பது ஆண்டவர் தரும் பரிசு. அது கர்ப்பத்தின் கனி. இதனை மறந்து சிலர் கர்ப்பத்திலேயே குழந்தைகளைக் கொலை செய்து விடுகிறார்கள். இத்தகைய செயல்களிலிருந்து விடுபட்டு மனமாற்றம் பெறுவோம்.

# ENGLISH CAMP-2005

# J/VEMBADI GIRLS' HIGH SCHOOL

## MESSAGE FROM Z.D.E. JAFFNA



It is with great pleasure I send this message of felicitation to J/Vembadi Girls' High School for engaging in a number of activities which give boost to the English Language which is indispensable for globalization. For Socio – Economic development, Human Resources Development is essential and English Education plays a major role in this aspect. Fluency in a Language, especially the International Language is a factor that develops the personality of the individual.

J/Vembadi Girls' High School is conducting an English Camp and is publishing a special passage with distinction. I congratulate all the teachers of English who are ably guiding the students in these tasks and the principal who monitors with efficiency.

I wish J/Vembadi Girls' High School continued success in building the future society.

**Mr.V.T.Selvaratnam,**
**Zonal Director Of Education,**
**Zonal Education Office, Jaffna.**

## FELICITATION MESSAGE

*It is with great pleasure that I write these lines to thank the Principal the teachers and the students of Vembadi Girls' High School for organizing an English Camp.*

*According to the English Language Action Plan funded by the World Bank, School Based English Activities play an important role since they are meant to be continuously used through the teaching learning process. I am sure, the English camp organized by your school which includes a variety of activities, will enhance the development of confidence in interacting in English as the students will be exposed to a total immersion environment.*

*I hope your camp will be a model to the other schools. I wish Good Luck and God's Blessings in your efforts to develop the standard of English.*

**Mrs.Philomena Perera,**
**Director of Education (English),**
**Ministry of Education,**
**Isurupaya,**
**Battaramulla.**

## A Ground – Breaking Effort



I am very much elated to learn that J/Vembadi Girls' High School is putting into effect as the first institution in the district an English Camp to stimulate interest among the pupils on a variety of School – Based English Activities.

Educationally and linguistically all the activities planned under the School – Based English Activities are meant to the making of learning English interesting far removed from the monotonous classroom work of chalk and talk.

I am sure that the tried and tested method hailed as the 'Royal Road' to teaching a Language, especially English as a second Language, to our pupils who need proper motivation, is a ground – breaking effort.

I congratulate the principal and the tutorial staff on their effort and wish them all success.

**Mr.S.Thiakarajah,**
**Asst. Director Of Education (English),**
**Zonal Education Office, Jaffna.**

## Message from A.D.E (English) NEP

***Principal,Staff,and My dear Students,***

*We are all well aware that the standard of English in our part of the Island is far below the expected standard but we are still proud of some of our schools like J/Vembadi Girls' High School Jaffna take keen interest to inculcate the knowledge of English in our students.*

*In the recent past, the English Units of the Ministry of Education and the Provincial Department of Education have taken steps to implement an action plan to carry out School Based English Activities in every school in the province. We appreciate very much that J/Vembadi Girls' High School is one of the pioneer schools in organizing school level English camp in conformity to our English Action Plan.*

*I am indeed delighted to send in my felicitation on the occasion of your conducting the English camp. I am sure that your effort will have successful result in the long run and I wish you all every success.*

**Mr.G.A.Francis,**
**ADE/ English. NEP,**
**Provincial Department of Education.**

## ENGLISH EDUCATION CAMPS

### INTRODUCTION

**Camping is a process in which students can get together and work in a stress – free learning situation co – operatively and collaboratively. Here, students are given more opportunities to acquire language meaningfully in an authentic atmosphere. This also ensures "learning by doing" principle. Opportunities are given to develop the four language skills in a total immersion environment within a set time frame. Another important aspect of this pro gramme is that it ensures multicultural understanding, and mutual respect when students from different ethnic groups work together. This programme promotes leadership qualities and strengthens organizational skills.**

**Objectives**

1. To develop confidence to interact in English. To encourage co – operative and collaborative learning.
2. To develop leadership qualities in students.
3. To promote multi – cultural understanding among differ ent ethnic groups.
4. To introduce a novel learning culture.

## A Maiden Venture English Camp 2005



I am enlivened with tremendous pleasure to write this message of congratulations to our English Union on their en route to English Camp – 2005. On realizing the importance of English.. The International Language the Ministry of Education has introduced a set of school based activities based on learning language through discovery and co-operative learning principles. English Camp is one amongst them. Camping is a process in which students can get together and work in a stress – free learning situation co- operatively and enhances the four skills – Writing, Reading, Listening and Speaking - in English Language.

Our efficient panel of English teachers have carefully designed and energized all the planned activities to cater the present English Language needs of Grade 8 Students of our school and other five neighbouring girls' schools. It is felt for a long time, that the great need of practising English Language among our students and ultimately the English Union has emulated and entrusted "English Camp 2005".

I am sure that this worthy effort will pave a vicissitude among the participants and will be a "Never To Be Forgotten One" among their minds.

I wish The English Union & the participants a Rapturous Endeavour in this Great Occasion.

**Mrs. K.Ponnampalam,**
**The Principal,**
**J/Vembadi Girls' High School .**

*English Tutorial Staff*

*J/Vembadi Girls' High School*



SEATED (L-R) : Mr.K.Velummailum, Mr.P.N.Shuthar -son, Mrs. J.Denicius, Mrs. K.Ponnam -palam(Principal), Mrs.S.Sockalingam (Deputy Principal), Mr.K.Srirajkumar.

STANDING (L-R) : Miss.P.Maylvahanam, Miss.P.Rat -nagobal, Miss.T.Shanmugalingam, Mrs. A.Sivasakthivel, Miss.A.Gunarat -nam, Miss.M.Vinayakamoorthy

## MESSAGE FROM Z.D.E. VALLIKAMAM



*I am greatly delighted in sending a message of felicitation to the students on the occasion of their having an 'English Camp' for two days at J/Vembadi Girls' High School. When learning English is relatively at lower ebb in Jaffna, variety of activities like this will help motivate the students to learn English in a friendly manner.*

*Activities like this will eliminate monotony, reduce restriction and help the students to get rid of inhibition in the long run and begin speaking English freely and fearlessly.*

*The English Union of J/Vembadi Girls' High School sets an example by holding this English Camp. I hope the other schools will follow this example and try to have activities of this kind with the view of improving English learning environment. I congratulate the English Union of J/Vembadi Girls' High School for initiating this activity.*

**Mr.P.Vigneswaran,**
**Zonal Director of Education,**
**Vallikamam Zone,**
**Jaffna.**

## Teacher In charge Speaks

**I am over whelmed with great pleasure to say a few comments about this camp. English Camp 2005 will be definitely a memorable event to all of us. Camping is a process of learning which students can get together and work in a stress free environment and learning situation cooperatively and collaboratively. The students will be provided enough opportunities to acquire language in a practicable way. I assure that this Programme will definitely promote leadership qualities and strengthen organizational skills. This kind of venture will definitely benefit our students to learn English in a useful way. I hope that these innovative programs will be held more and more in future to cater the needs of our future generation.**

**I wish all the participants an enjoyable, fruitful English Camp on their way.**

**Mr.K.Velummailum,**
**Teacher - In - Charge,**
**English Union,**
**J/Vembadi Girls' High School.**

## J/Vembadi Girls' High School. English Camp -2005 Agenda

**Day1 - 11th March 2005**

| | |
|---|---|
| 1. 4.00 - 4.30p.m. | Arrival of the students |
| 2. 4.30 - 5.00 p.m. | Registration of students |
| 3. 5.00 - 5.15 p.m. | Lighting of oil & Two minutes silence. |
| 4. 5.15 - 5.30 p.m. | Welcome Address by Teacher-in-charge |
| 5. 5.30 - 5.45 p.m. | Principal's Address |
| 6. 5.45 - 6.00 p.m. | Address by the Director of Education |
| 7. 6.00 - 6.30 p.m. | Grouping of Students |
| 8. 6.30 - 7.00 p.m. | Find someone who (Getting to know activity) |
| 9. 7.00 - 7.30 p.m. | Whispering Dictation (Group activity) |
| 10. 7.30 - 8.30 p.m. | Dinner |
| 11. 8.30 - 9.00 p.m. | Enrichment Activity (Songs) |
| 12. 9.00 - 10.00 p.m. | A film show |

**Day2 - 12th March 2005**

| | |
|---|---|
| 1. 6.30 - 7.00 a.m. | Tea |
| 2. 7.30-8.00 a.m | Breakfast |
| 3. 8.30 a.m. | Inauguration of the Second Day Programme |
| 4. 8.30-9.00 a.m. | Warm Up Activity (Presenting Words with the first letter of their names) |
| 5. 9.00-9.45 a.m. | Lie Detector Group Activity |
| 6. 9.45-10.00 a.m. | Tea |
| 7. 10.00-11.00 a.m. | Making Visuals related to their lessons |
| 8. 11.00-12.00 noon | Exhibition |
| 9. 12.00-1.00 p.m. | Lunch |
| 10. 1.00-1.30 p.m. | Grammar Auction |
| 11. 1.30-2.00 p.m. | Songs and Chants |
| 12. 2.00-2.10 pm | Principal's Address |
| 13. 2.10- 2.30 pm | Presentation of experiences of group leaders. |
| 14. 2.30 - 3.30 pm | Distribution of Certificates |
| 15. 3.30 pm | Vote of Thanks |

*with the best compliment of :* ஈழநாடு **NAMATHU EEZHANADU** **267, Navalar Road, Jaffna.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உடுத்துறை - தாளையடி பகுதிகளில் 134 தற்காலிக வீடுகள் கையளிப்பு!

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறையில் 110 குடிமனைகளும், தாளையடியில் 24 குடிமனைகளுமாக மொத்தம் 134 தற்காலிக குடிமனைகளைக் கொண்ட இரு குடியிருப்புகள் நேற்று திறந்துவைக்கப்பட்டன.

முதற்கட்டமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், கீயுடெக் நிறுவனமும் இணைந்து நிறுவிய தற்காலிக குடிமனைகளைக் கொண்ட குடியிருப்பு உடுத்துறையில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

உடுத்துறைக் கிராம அலுவலர் தேவராசா தலைமையுரையையடுத்து மருதங்கேணி உதவித்திட்ட பணிப்பாளர் உட்பட தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் கெங்காதரன், கீயுடெக் இணைப்பாளர் அன்ரன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இதனையடுத்து சுனாமி பேரலை அனர்த்த அவசரகாலப் பணி ஒருங்கிணைப்புச் செலயக இணைப்பாளர் சுடர்மணி, கீயுடெக் நிறுவனப் பிரதிநிதி லோறன்ஸ் ஆகியோர் குடிமனைகளை மக்களிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி சலீம், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மூவேந்தன், கடற்புலிகளின் கட்டளைத் தளபதி செஞ்சேரன், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் தவராஜா, சுனாமி பேரலை அனர்த்த பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் ஆகியோர் உட்பட தமிழர் புனர்வாழ்வு கழக தொண்டர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது நிகழ்வாக நேற்று நண்பகல் 12.00 மணியளவில் வடமராட்சி கிழக்கு தாளையடியில் அமைக்கப்பட்டுள்ள 24 தற்காலிக குடிமனைகளைக் கொண்ட குடியிருப்பு ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் உட்பட கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஆகியயோர் சுடர்களை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

சோ. தங்கன் மற்றும் கிராம சேவையாளர் உலகராஜா கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை யுனிசெவ் பிரதிநிதி கல்யாணி, கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த எட்வேட், அந்தோனிப்பிள்ளை ஆகியோர் குடிமனைகளை மக்களிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்விலும் தமிழர் புனர்வாழ்வுகழகப் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வு கழக தொண்டர்கள் போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## குடும்பஸ்தரை மோதியது...

இதன்போது பொதுமக்களும் படையினரும் மோதியதால் சாவகச்சேரி நகரே நேற்று பெரும் போர்க்களமாகக் காட்சியளித்தது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது –

நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி நகரில் இராணுவ ட்ரக் வண்டி மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற சின்னத்தம்பி மனோகரன் (வயது 45) என்பவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு திரண்டிருந்த மக்களை விரட்டிவிட்டு ட்ரக் வண்டியை அகற்ற முற்பட்டவேளை படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை தேன்றியது.

விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வந்து நேரில் விசாரணை நடத்தும் முன்னர் ட்ரக் வண்டியை எடுக்க முற்பட்டதால் ஆத்திரமடைந்த மக்கள் இராணுவத்தினர் மீது கற்கள்வீசி விரட்டினர். இதையடுத்து இந்தப் படையினர் தமது நிலைகளை விட்டு ஓடியதையடுத்து – பொதுமக்களால் இந்தப் பகுதியில் இருந்த இரண்டு காவலரண்கள் அடித்து நொருக்கப்பட்டதுடன் தீவைத்தும் எரிக்கப்பட்டன.

இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இராணுவத்தினருடன் இணைந்து பொதுமக்கள் மீது கற்கள், கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதில் கச்சாய் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சசிகரன் (வயது 21), எஸ். குமரன் (வயது 30) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை வீதியால் பயணம்செய்த பொதுமக்கள் தாக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தை அடுத்து நகரில் இருந்த வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன் பதற்றநிலை உருவானது.

சம்பவம் நடைபெற்ற சில மணி நேரத்தின் பின்னர் ஸ்தலத்துக்கு சென்றிருந்த சாவகச்சேரி பொலிஸார் விபத்தில் மோதி சேதமடைந்த வாகனத்தை எடுத்துச்சென்றனர்.

இப்பகுதிக்கு சென்ற மாவட்ட போர்நிறுத்த கண்ணாணிப்பு குழுவின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் தென்மராட்சி பிரதேச பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துயையாடி நிலைமையை வழமைக்கு கொண்டுவர எடுத்த முயற்சி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலை வரை சாவகச்சேரி நகரப் பகுதியில் தொடர்ந்தும் மறியல் போராட்டமும், பதற்றநிலையும் நீடித்தது குறிப்பிடத்தக்கது.–

## புளொட் அலுவலகத்தின்மீது...

நாகமணி சிவராசா (வயது 45), பகீரதன் லக்ஷ்மிகாந் (வயது 14) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இவர்களில் கந்தன் மற்றும் வெள்ளை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்றிரவு கெண்டு செல்லப்பட்டனர்.

புளொட் அலுவலகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள போதிலும் பின்பக்க காணி வழியாக இந்த கைக்குண்டு வீசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்றபோது காயமடைந்தவர்கள் உட்பட 10 புளொட் உறுப்பினர்கள் அலுவலகத்துக்கு வெளியேயுள்ள கொட்டிலில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் பின்பக்க காணியில் வழமையாக மாடு மேய்க்கும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (29,34)

# முஸ்லிம் ஓட்டோ சாரதி கொலை; வாழைச்சேனையில் ஆர்ப்பாட்டம்

ஓட்டமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேச முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை அன்நூர் தேசிய பாடசாலை மைதானத்திலிருந்து மாவடிச்சேனை சந்திவரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கல்குடா முஸ்லிம் மக்கள் முன்னணி என்ற அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னிட்டு இந்தப் பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. காலையில் ஓட்டமாவடி பிரதான வீதியின் சில இடங்களில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் பொலிஸாரால் அவை அகற்றப்பட்டன. ஆர்ப்பாட்ட முடிவில் இந்தக் கொலை தொடர்பாக ஆணைக்குழு விசாரணை நடைபெறவேண்டும் எனக்கோரி மனுவொன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதேவேளை இரண்டாவது நாளாக இந்தப் பிரதேசங்களில் பணிப் புறக்கணிப்பு அனுஷ்டிக்கப்பட்டதால் பிரதேசத்தின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

இதேவேளைத கல்குடா முஸ்லிம் மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர் உட்பட நால்வர் தாக்கப்பட்டனர்.

தனியார் தொலைக்காட்சியொன்றின் நிருபரான அப்துல் லத்தீப் அவரது உதவியாளர் ஊடகவியலாளர் எம்.சுபைரின் புதல்வன் ரிஸ்னாஸ் ஆகிய ஊடகத்துறையுடன் தொடர்புடையவர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவட்ட அமைப்பாளரான எம்.பரீத் ஆகியோரே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராக கோசங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அதன்மாதிரி இலட்சினையொன்றையும் ஆர்ப்பாட்ட முடிவில் தீவைத்து எரித்தனர்.

ஊடகத்துறையினருடன் தொடர்புடையவர்கள் தாக்கப்பட்டபோது அங்கு விரைந்த பொலிஸார் அவர்களை மீட்டனர். இதையடுத்து ஏனைய ஊடகவியலாளர்களும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக்குழுவினரே (அமைச்சர் அமீர் அலியின் ஆதரவாளர்கள்) இருந்ததாக இந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## பாலியல் வல்லுறவு முயற்சி; சிப்பாய் விளக்கமறியலில்!

நீர்வேலி வில்லுமதவடிப்பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள வீடுஒன்றினுள் புகுந்து பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தார் என குற்றம் சட்டப்பட்ட இராணுவ சிப்பாய் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நீர்வேலி பகுதியில் நேற்று முன்தினம் பெண் ஒருவர்மீது பாலியல் வல்லுறவுறவில் ஈடுபட முயற்சித்தார் என சந்தோகத்தின் பெயரில் 34 வயதான விமலரத்ன என்ற சிப்பாயே கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான், எதிர்வரும் 14 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் சிப்பாயைத் தடுத்துவைக்குமாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த இராணுவ சிப்பாயை இனங்காட்டும் அடையாள அணிவகுப்பு ஒன்றும் யாழ் நீதிமன்றில் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்...

உணவுப் பொருட்கள் இப்பகுதிகளுக்கு எம்மால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்த உணவுப் பொருட்களில் மருந்துப்பொருட்கள் வைத்தியர்கள் அடக்கப்படவில்லை. பாய் மற்றும் உடுபுடவைகளும் எம்மால் அனுப்பிவைக்கப்பட்டன.

சுனாமியால் ஏற்பட்ட சேத விபரம் 1.8 பில்லியன் என நாம் மதிப்பிட்டுள்ளோம் இந்த அனர்த்தத்தின் மீள் கட்டுமானம் அடுத்த ஆறுமாதங்களுக்குள் முழுமையாக நிறைவடையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிப்பாய்...

காலை 7.30 மணியளவில் இராணுவத்திற்கெதிராக பொதுமக்கள் வீதியில் ரயர்களைப்போட்டு எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து இராணுவத்தினர் மக்களை நோக்கி கல் எறிந்ததால் ஆத்திரமடைந்த மக்கள் இராணுவத்தினர் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியதால் அப்பகுதி போர்க்களம்போல மாறியது.

தொடர்ந்து மக்கள் காவலரணை தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் இப்பகுதயில் பதற்றம் நிலவியது.

தொடர்ந்து பருத்தித்துறை, கொடிகாமம், நெல்லியடிப் பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டபோதும் மக்கள் தொடர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை இராணுவக் கட்டளை அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு இராணுவ தளபதி நேரில் வந்து குறிப்பிட்ட சிப்பாயை கைது செய்ததையடுத்து, மக்கள் தமது போராட்டத்தை கைவிட்டனர். (14,12)

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி பஞ்சரட்ணம்

வரணி வடக்கு அ.த.க.பாடசாலையின் அதிபர் கந்தசாமி பஞ்சரட்ணம் 11.03.2005 அன்று காலமாகிவிட்டார்.

இவர் வரணி வடக்கு கந்தசாமி – தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குணரட்னம் (குணம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கொடிகாமம்), நவரட்ணம் (டென்மார்க்), விஜயரட்ணம் (நீர்வழங்கல் சபை வவுனியா), சண்முகநாதன் (நீர்வழங்கல் சபை யாழ்ப்பாணம்) தாமரைச்செல்வி (ஹொலண்ட்), வேந்தன் (திவ்யா ரவல் சிற்றூர்தி உரிமையாளர்), மனோகரன் (மனோ ஸ்ரோர் வட – வரணி), சுதாகரன் (லண்டன்) ஆகியோ ரின் சகோதரனுமானாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:–
குணரட்னம். (சகோதரன்)

(3894)

## அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து

(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு ஊழியர்)

யாழ்ப்பாணம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் – இல.124 கட்சன் வீதி வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து 10.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:–
மனைவி பிள்ளைகள், மருமகன்.

(இ)

# கண்ணீர் அஞ்சலி



இராசையா சிவராசா கிளை – முகாமையாளர் வே.ப.நோ.கூ.சங்கம் தந்தையாரும், முன்னாள் வே.ப.நோ.கூ.சங்கத்தின் தலைவரும், அல்லை மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் முன்னாள் தலைவரும், சமூகத் தொண்டரும், இறைபக்தி கொண்டவருமான

## அமரர் செல்லத்தம்பி இராசையா

அவரின் மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்.

வேலணை ப.நோ.கூ.சங்கம்,
வேலணை.

(சீ-3893)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உயர்கல்வி நிறுவனங்களின் 50 மாணவர்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கோளினால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் 50 பேருக்கு உதவித் தொகை வழங்கும் நிகழ்வொன்று, நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில், யாழ்.பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை துணை இணைப்பாளர் ம.குகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் சிவநாதன், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.கிருஸ்ணா, ரீடோ பணிப்பாளர் செ.செல்வராஜ ஆகியோர் நிகழ்த்தினர்.

அதைத் தொடர்ந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட 50 மாணவர்களுக்கான நிதியுதவியை கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் சிவநாதன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், போராசிரியர் சண்முகலிங்கம், நல்லூர்க் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் வழங்கினர்.

# ஐ.சி.ஆர்.சி தலைமையக பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க கொழும்புத் தலைமையகப் பிரதிநிதிகள் கடந்தவாரம் வடமராட்சி கிழக்குப்பிரதேசத்துக்கு விஜயம் செய்து, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களைப் பார்வையிட்டனர்.

கொழும்பில் இருந்து இவர்களால் எடுத்துவரப்பட்ட கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் என்பன மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் 390 மாணவர்களுக்கும், 510 பொதிகள் உடுத்துறை மகா வித்தியாலய மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்தக் குழுவில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைமையகத் தலைவர் பீ.அபயசிங்க, செயலாளர் நாயகம் நிமல்குமார் ஆகியோருடன் 20 பிரதிநிதிகளும், யாழ்ப்பாண செஞ்சிலுவைச்சங்க கிளைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (21)

# நடமாடும் சேவையில் 3 ஆயிரம் பேர் அடையாள அட்டைக்கு விண்ணப்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு, தமது அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கான நடமாடும் அடையாள அட்டை வழங்கும் சேவையில் 3 ஆயிரம் பேர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளனர் என, யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி பிரதேச செயலகத்திலும், வடமராட்சி பிரதேசசெயலகத்திலுமே இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் இலவசமாக அடையாள அட்டைக்கான புகைப்படங்கள் எடுப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரதும் விண்ணப்பங்கள் – கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு தற்போது எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகள் அனைத்தும் மூன்று வாரகாலத்தினுள் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நீண்டகாலமாக திருத்தப்படாத வீதி

திருநெல்வேலி – ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு தொடக்கம் கொக்குவில் வரையான பகுதி நீண்டகாலமாக சேதமடைந்து, திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் முதல் திருநெல்வேலி சந்தைக்கு பொருட்களைக் கொள்வனவு, விற்பனை செய்ய வரும் வியாபாரிகள், பொதுமக்கள் என பலதரப்பட்டவர்கள் பயணம் செய்யும் முக்கிய வீதியாக இது உள்ளது.

இந்த வீதியில் குழிகளை விலத்திச்செல்ல முற்படும்போது, சிறு சிறு விபத்துக்களும் ஏற்படுகின்றன.(63)

☆ ☆ ☆

யாழ்.பாங்வால் வீதியில் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும், கொட்டடி வீதி சந்திக்கும் இடைப்பட்ட வீதி நீண்டகாலமாக குன்றும் குழியுமாக இருந்துவருகிறது.

இதேவேளை குருநகர் மவுண்கார் மேல் வீதி கடற்கரை வீதி சந்தியில் சந்தியில் அமைந்துள்ள வடிகால்மூடி உடைந்துபோயுள்ளது. (206)

# கொக்குவில் ஆயுர்வேத வைத்தியசாலையை தொடர்ந்து இயங்கவைக்குமாறு கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு – கேணியடியில் நல்லூர் பிரதேசசபையால் வாரத்தில் செவ்வாய், வியாழக்கிழமைகளில் நடத்தப்பட்டுவரும் இலவச ஆயுர்வேதவைத்தியசேவையை வாரத்தில் வரும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் வழங்கி உதவுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் – காங்கேசன் துறைவீதியில் ஆரம்பித்து, ஆனைக்கோட்டை உள்ளடங்கலாக நான்கு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசமாகவும், அதிகளவான வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைக் கொண்ட பகுதியாகவுமுள்ளது.

இந்தப் பகுதியில் எந்தவித தனியார் வைத்தியநிலையமும்கூட இன்மையால்– நோயாளர்கள் நீண்டதூரம் நடந்தும், சைக்கிளிலும் வேறு இடங்களுக்குச்சென்று தமது வைத்திய தேவையைப் பெறவேண்டியுள்ளதாகக் கவலை தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நிர்வாகம் இந்த வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியரை நியமித்து, தொடர்ந்தும் வைத்தியசாலையை இயங்கவைக்க உதவும்படி, அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (63)

## மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், கோண்டாவில் சுகாதார செயற்திட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்த பொதுக் கூட்டம், எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறையில் நடைபெறவுள்ளது. (63)




யு.என்.எச்.சி.ஆர். அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பால் நிலை வன்முறைகளுக்கு எதிரான அமைப்பினால் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட திறன் வெளிக்கொணர்வு போட்டியில் பங்குபற்றிய ச.சக்திதாஜினி யாழ்.பொலிஸ் நிலைய பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப்பொறுப்பான அதிகாரி என்.நவரட்ணராஜாவிடமிருந்து பரிசு பெறுகிறார். (101)



ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி தேவாலயத்தில் நடைபெற்ற "தீர்ப்பு" எனும் தென்மோடி நாட்டுக்கூத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம் . (46)



யாழ்.நாவற்குழி மகாவித்தியாலத்துக்கு ஒலிபெருக்கி சாதன தொகுதி ஒன்று சுவிஸில் வசிக்கும் இந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர்களான ஜெயந்தி நடராசா குடும்பத்தினரால் அன்பளிப்பு செய்யப்பட்டது. அவற்றுக்குரிய ஆவணங்களை வித்தியாலய அதிபர் கோபாலசிங்கம் ஜீவபாலனால் கையளிக்கப்படுகிறது. (31)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பசான் வாசிப்பு போட்டிகள்

யாழ்.குருநகர் புனித யாகப்பர் ஆலய திரு இருதய சபையின் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்படவிருக்கும் பசான் வாசிப்புப் போட்டிகள், இந்த மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருப்பதாக சபைச் செயலாளர் ஏ.எப். சேவியர் அறிவித்துள்ளார்.

நூற்றாண்டை ஒட்டி ஆலய பங்கு மட்டுமல்லாமல்– இளவாலை, பருத்தித்துறை மறைக் கோட்டங்களுக்குமாக இந்தப் போட்டி இடம்பெறுவதாகவும் – பங்குபற்ற விரும்புபவர்கள் இந்த மாதம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (206)

## மீன்பிடிப் படகுகள் வழங்கப்படவுள்ளன

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கியூமெடிக்கா நிறுவனம் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மூன்றாவது கட்டமாக மீன்பிடிப் படகுகள் வழங்கும் வைபவம் இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளது. இந்த நிறுவனம் இதுவரை இரண்டு கட்டங்களாக 90 மீன்பிடிப் படகுகளையும், அவற்றுக்கான உபகரணங்களையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(14)

## கலந்துரையாடல்

சுனாமி அனர்த்தத்தால் கடற்தொழில் துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கடற்தொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப் பாளர் க.தர்மலிங்கம் கேட்டுள்ளார். (21)

## தையல் மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு – கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி, இன்று காலை 10 மணி முதல் மாலை 5.30 மணிவரை யாழ். வேலணை மேற்கு நடராசா மகா வித்தியாலயத்தில், வேலணை பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக, யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி ச.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார். (63)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி, நாளை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வலைப்பந்தாட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் யுத்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம், புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம், புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளதாக – கோப்பாய் பிரதேச விளையாட்டு அதிகாரி எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஏழு



பெயர் : அ.அமலவட்சனா
முகவரி : நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ----------------

முகவரி : ----------------

பிறந்த ஆண்டு : ----------------

கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தை செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் பார்வை!

(முல்லைத்தீவு)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைமைச் செயலக பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டது.

இந்தக் குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபருடன் கலந்துரையாடலைமேற்கொண்டனர்.

இதன் பின்னர் முல்லைத்தீவு மகா வித்தியாலயம், கள்ளப்பாடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. பாடசாலை ஆசிரியர்களுக்கான உணவல்லாத சிறிய பொதிகளும் வழங்கப்பட்டன. அத்துடன், ஏனைய பாடசாலைகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் தற்காலிக குடிசைகளில் தங்கியுள்ள மக்களுக்கான 2 ஆயிரம் உணவல்லாத பொதிகள் கொண்டுவரப்பட்டு, வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையா டினர்.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் ஜெயபந்து அபயசிங்க, செயலாளர் நிமால்குமார் உட்பட்ட குழுவினர் முல்லைத்தீவு பிரதிநிதிகளுடன் இணைந்தே இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.




## எட்டு வருடங்களாக தொடர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள்

(மன்னார் )

மன்னார் - முருங்கன் பகுதியிலுள்ள ஜீவோதயம் நலன்புரி நிலையத்தில் 267 குடும்பங்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன.

இந்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மன்னார் நாகதாழ்வு, நாவற்குளம், பறப்பாங்கண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு கடந்த 8 வருடங்களாக இடம் பெயர்ந்து இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 3 ஆண்டுகளாக நிலவி வரும் சமாதான சூழலிலும், தமது வாழ்விடங்களை உயர்பாதுகாப்பு வலயம் எனக் காரணம் காட்டி மீளக்குடியமர இராணுவத்தினர் அனுமதிக்காதுள்ளனர்.

இதனால் இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்கின்ற மக்கள் - தற்காலிக குடிசைகளில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர்.

## மூவின மக்களையும் உள்ளடக்கிய வலயக் கட்டமைப்புத் தெரிவு!

வவுனியா தெற்கு பிரதேசத்தின் தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவின மக்களையும் உள்ளடக்கிய 5 பிரதேசங்களுக்குமான வலயக் கட்டமைப்புத் தெரிவு அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு - முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.கணேசபாதம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் எஸ்.டி.மூர்த்தி, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் சேனாதிராசா, செட்டிகுளம் பிரதேச கட்டமைப்புத் தலைவர் அருட்திரு தேவகரன் மற்றும் ஏனைய பிரதேச கட்டமைப்புத் தலைவர்கள், முன்பள்ளி பிரதேச, வலய இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் இந்த கட்டமைப்பின் செயற்பாடுகள், ஆசிரியர் வேதனம் வழங்கல், முன்பள்ளிகளுக்கான தளபாடம் வழங்கல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. இதனைத் தொடர்ந்து வலயக் கட்டமைப்புத் தெரிவு இடம்பெற்றது. (03)

## பால் சேகரிப்பு நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்ட கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் பால்சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்ட கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் ஜெயபுரம் பொதுநோக்கு மண்டபம், நறுமை மின்வழங்கல் நிலையம், தர்மபுரம் அருச்சுனா பால் சேகரிப்பு நிலையம், மாங்குளம் ஆகிய பகுதிகளில் பால்சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்தச் சங்கத்தின் முகாமையாளர் தெரிவித்தார்.

## தலைமன்னார் பகுதியில் அபிவிருத்திப் பணிகள்!

(தலைமன்னார்)

தலைமன்னார் படைப்படி, கட்டுக்காரன் குடியிருப்பு, பருத்திப் பண்ணை ஆகிய இடங்களில் உலக தரிசனம் நிறுவனத்தால் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பகுதிகளில் இதுவரை 10 லட்சம் ரூபா பெறுமதியில் முன்பள்ளி, பொதுமண்டபம், குடிநீர்க் கிணறுகள், கழிப்பறைகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை விட மேலும் 300 கழிப்பறைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் 12

1879 : ஸ்கண்டியம் என்ற உலோகம் சுவீடன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி எல்.நில்ஸன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1917 : பாண் கட்டாயமாக நிறுத்துத்தான் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று பிரிட்டனில் 'பாண் சட்டம்' கொண்டுவரப்பட்டது.

1918 : சோவியத் அரசு பெட்டோகிராடிலிருந்த நிர்வாகத்தை மொஸ்கோவுக்கு மாற்றிக்கொண்டது.

1930 : அகமதாபாத்திலுள்ள தனது ஆசிரமத்திலிருந்து மகாத்மா காந்தி தண்டி யாத்திரையைத் தொடங்கினார்.

1938 : எவ்வித எதிர்ப்பும் இல்லாத நிலையில் ஒஸ்ரியாவை ஜேர்மனி இலகுவாகக் கைப்பற்றிக்கொண்டது. ஒஸ்ரியாவை தனது ஒரு மாநிலமாகவும் பின்னர் ஆக்கிக்கொண்டது.

1947 : கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க ஒரு புதிய அயல்நாட்டுக் கொள்கையை அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் அறிவித்தார். இது ட்ரூமன் கொள்கை என குறிப்பிடப்படுகிறது.

1966 : முப்படைகள் விடுத்த எச்சரிக்கையின் பேரில் இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்ணோ தனது அதிகாரங்களை ஜெனரல் சுகார்ட்டோவிடம் ஒப்படைத்தார்.

1968 : மொரீசியஸ் சுதந்திரம் பெற்ற நாள்.

1981 : விளாடிமர் கோவாலியானேக் விக்டர் சாவினிக் ஆகிய இரு விண்வெளி வீரர்களுடன் சோயூஸ் - டி 4 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது.

1988 : நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நடந்துகொண்டிருந்த உதைபந்தாட்டப் போட்டியொன்றின்போது திடீரென ஆரம்பித்த புயல், ஆலங்கட்டி மழை காரணமாக போட்டியைப் பார்வையிட வந்த கூட்டத்தினர் பயந்து ஓட ஆரம்பித்தபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 70 இற்கும் மேற்பட்டோர் மிதிபட்டு இறந்தனர்.

1992 : மொரீசியஸ் தீவு குடியரசாகியது.

1993 : நூறு நிமிட இடைவெளிக்குள் பம்பாய் நகரில் 13 இடங்களில் குண்டுகள் வெடித்தன. 250 பேர் வரை இறந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

தொகுப்பு - சந்துரு

## அடிப்படை வசதியற்ற நிலையில் விநாயகபுரம் பகுதி மக்கள்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விநாயகபுரம் பகுதி மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள விநாயகபுரம், ஒட்டன்குளம், கொம்பறுத்தகுளம், பூவரசன்குளம், பொன்னகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இவர்களில் பெரும்பாலானோர் கடந்த 25 வருடங்களுக்குமேலாக தற்காலிக குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதி மக்களுக்கான போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி என்பன இதுவரையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

இவர்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதாயின் - பல மைல்களுக்கப்பால் சென்றே பூர்த்திசெய்து வருகின்றனர்.

## ஆளணிப்பற்றாக்குறை நிவர்த்தி

மன்னார் மாவட்டத்தின் பொது மருத்துவமனையில் தற்பொழுது ஆளணிப்பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக, இந்த மருத்துவமனை தொடர்ச்சியான ஆளணிப் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்து வந்துள்ளது.

தற்பொழுது 9 தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், புதிய வைத்திய நிபுணர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஓரளவு ஆளணிப்பற்றாக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## சமூக ஊக்குவிப்பு பயிற்சி

நிகொட், கார்ப் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் சமூக, ஊக்குவிப்புப் பணியை முன்னெடுப்பதற்காக பூம்புகார் கிராமத்திலுள்ள 8 தொண்டர்களுக்கு சமூக ஊக்குவிப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் 4 சைக்கிள்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

# புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் கேணல் கிட்டு நினைவாக நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

கேணல் கிட்டுவின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் புலிகளின் குரல் சிறப்பு முத்தமிழ் கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றன.

பிற்பகல் 4 மணிக்கு இந்த நிகழ்வு புலிகளின் குரல் துணைப் பொறுப்பாளர் வி.செயல்வீரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை திருமதி பொன் தியாகம் ஏற்றி வைத்தார்.

கேணல் கிட்டுவின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார்.

திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அணிவித்தார்.

பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் உருவான வரவேற்பு நடனத்தையடுத்து, வரவேற்புரையை புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் இ.இராஜேந்திரன் நிகழ்த்தினார்.

சிறப்புரையை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு நாளாந்த அவதானிப்பு வினாவிடைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் விதுசா, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

தொடர்ந்து புலிகளின் குரல் கலைஞர்களான ஆதிலட்சுமி சிவகுமார், தி.தவபாலன், போராளி வெற்றிச்செல்வி, செந்திரு, ஜெயசீலன் ஆகியோரின் கவியரங்கமும், மல்லாவி வானொலி மன்றத்தின் 'தொடுவானம்' எனும் நாடக நிகழ்வும் இடம் பெற்றன.

தெரிவுசெய்யப்பட்ட மன்றத்துக்கான சுற்றுக்கேடயத்தை தளபதி கேணல் தீபன் வழங்கிக் கௌரவித்தார். இந்த நிகழ்வின் நன்றியுரையை த.சதீஷ்வரன் நிகழ்த்தினார்.




புலிகளின் குரல் சிறப்பு முத்தமிழ் கலையரங்கில் நேற்றுமுன்தினம் கேணல் கிட்டுவின் 12 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் 2004 ஆம் ஆண்டு நாளாந்த அவதானிப்பு வினா விடைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் விதுஷா ஆகியோர்வழங்குவதையும், கலைநிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.